விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி


பக்கங்கள்: இருபது Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 03 திங்கட்கிழமை (19.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 365

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## பொறுப்பை உணர்ந்து செயற்படும் இலங்கை

### பான் கீ மூன் நம்பிக்கை



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற முப்பது வருட கால போர் முடிபடைந்துள்ள நிலையில், இலங்கை தனது பொறுப்பை உணர்ந்து முன்னோக்கிச் செல்லும் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் மீது தாக்குதல்

(திருவனந்தபுரம்)

கேரளாவில் தமிழர்களும், தமிழகத்தைச் சேர்ந்த ஐயப்ப பக்தர்களும் தாக்கப்படுவதாக தவறான தகவல்கள் பரப்பப்படுகிறது.

இதை தமிழ் நாட்டிலுள்ள யாரும் நம்ப வேண்டாம் என்று கேரளா முதல்வர் உம்மன் சாண்டி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முல்லைப் பெரியாறு அணைவிவகாரத்தால் தமிழகம், கேரளாவில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. குமுளி, வண்டிப்பெரியாறு உட்பட கேரளாவின் பல்வேறு பகுதிகளில் தமிழக தோட்டத் தொழிலாளர்கள் மீது மலையாளிகள் தாக்குதல் நடத்துவதால் தினமும் ஏராளமான தமிழர்கள் கேரளாவிலிருந்து தப்பி தமிழகம் வந்துகொண்டிருக்கின்றனர்.

இதற்கு பதிலடியாக, தமிழ் நாட்டில் சென்னை உட்பட பல்வேறு இடங்களில் மலையாளிகள் நடத்தும் கடைகள், நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது.

இந்த நிலையில் கேரள முதல்வர் உம்மன் சாண்டி கொச்சியில் அளித்த பேட்டியில் கூறியதாவது,

முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக கேரளாவில் குறிப்பிட்டு சொல்லும்படி எந்தவன்முறை சம்பவமும், நடக்கவில்லை. வண்டிப் பெரியாறு, சப்பாத்து உட்பட சில (20ஆம் பக்கம் பார்க்க)

## 600 பொலிஸார் குறித்து உரிய விசாரணை வேண்டும்

### உறவினர்கள் கோரிக்கை

(கொழும்பு)

1990ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளிடம் சரணடைந்த சுமார் 600 பொலிஸார் கொல்லப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை நடைபெற வேண்டுமென படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பாக குறித்த பொலிஸாரின் உறவினர்கள் சிலர் தமது கருத்துக்களையும் வெளியிட்டுள்ளனர்.

அக்காலத்தில் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அனர்த்தம் ஏற்படக் கூடிய சாத்தியம்!

### வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அனர்த்தங்கள் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டல திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது குறித்து திணைக்களத்தின் கடமை நேர வானியல் நிபுணர் சூரியகுமார் தெரிவிக்கையில்,

இலங்கையின் வடக்குக் கிழக்கு பருவப் பெயர்ச்சிக்காலம் ஆரம்பிப்பதன் காரணமாகவும் வளி மண்டலத்தின் கீழ் அடைப்புக்களில் ஏற்பட்ட வானிலைக் குழப்பங்களால் அடுத்த சில (20ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இலங்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும்

### ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த, உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வழிகோலும் என ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை காத்திரமான பங்களிப்பை வழங்கும் என எதிர்பார்ப்பதாகவும்,

அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள்குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு இக்குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை விதிக்கப்படவேண்டியது (20ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததார். இச்சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் கோவிலடியில் இடம் பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த புவனேஸ்வரன் ஜெயராசன் (வயது40) என்ற குடும்பஸ்தரே மின்சாரம் தாக்கி உயிரிழந்தவராவார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனாவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-11)

## 'இனம்' பதத்தை நீக்க சி.ஆர்.டி.சில்வா பரிந்துரை

(கொழும்பு)

இலங்கையின் சகல அரசாங்க ஆவணங்களிலும் 'இனம்' என்ற பதம் நீக்கப்பட வேண்டும் என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவரான முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த தனது இறுதி அறிக்கையில் ஒரு விடயத்தைக் குறிப்பிடுவதற்கு அஜாக்கிரதையாக தவறியுள்ளதாக சி.ஆர்.டி.சில்வா கூறினார்.

இலங்கை அடையாளத்தை அபிவிருத்தி செய்வதன் அவசியம் குறித்து ஆணைக்குழு அங்கத்தவர்கள் நீண்ட கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)


## ஜனவரி முதல் சம்பள அதிகரிப்பு சுற்றுநிருபம் இன்று வெளியாகும்

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்குமான சம்பள அதிகரிப்பு ஜனவரி மாதம் முதல் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான அரச முகாமைத்துவ திணைக்களத்தின் சுற்றுநிருவம் இன்று வெளியிடப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை அரச சேவைகளில் பணியாற்றும் நிறைவேற்று அதிகாரிகளுக்கான வேதன அதிகரிப்பு இரண்டு கட்டங்களாக வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 50 சதவீதமான முதலாவது கட்ட மேலதிக கொடுப்பனவுகள் ஜனவரிமாதத்தில் வழங்கப்படும் அதேவேளை இரண்டாம் கட்டப் மிகுதி கொடுப்பனவுகள் ஜூலை மாதத்தில் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)




தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலைஞர்களின் இசைநிகழ்வின் ஆரம்பத்தில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இந்திய துணைத் தூதுவர் மகாலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் மற்றும் பார்வையாளர்களையும் படங்களில் காணலாம்.

# மக்களின் அனைத்து முறைப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்

## வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் வலியுறுத்தல்



(யாழ்ப்பாணம்)

மக்களினால் மேற்கொள்ளப்படும் அனைத்து முறைப்பாடுகளையும் ஏற்று விசாரணை மேற்கொள்ள வேண்டும் என வட பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் ரி.இந்திரன் பணித்துள்ளார்.

வட பிராந்தியத்திலுள்ள பிரதி பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்குமான விசேட கலந்துரையாடலியே அவர் இதனைப் பணித்துள்ளார்.

வடக்கில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இவற்றை கட்டுப்படுத்துவதற்கு பல பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும் எந்தவிதமான முன்னேற்றமும் காணப்படவில்லை.

வீதி சண்டைகள், விபத்துகள், போதைப் பொருள் விற்பனை என்பன அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதனை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை தேவை.

பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் முறைப்பாடு செய்யச் செல்கின்ற போதிலும் சில பொலிஸ் நிலையங்களில் சில முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எந்தவொரு முறைப்பாட்டையும் ஏற்று அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியது பொலிஸாரின் கடமை.

வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த போக்குவரத்து பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீதிக் கண்காணிப்பில் ஈடுபடும் சில ஆவணங்கள் இல்லாதவர்களிடம் லஞ்சம் பெறுவதாக பல தரப்பினரால் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பிலும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார். (எ)

# வாய்க்காலில் விழுந்து இளைஞன் மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்மடு நீர்ப்பாசன வாய்க்காலில் தவறி விழுந்த இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நவரத்தினம் ஜெயமோகன் (வயது 28) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் வயலுக்கு சென்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸாரும் மரண விசாரணை அதிகாரியும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

பிரேத பரிசோதனையின் பொருட்டு சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-11)

# இந்திய மீனவர்கள் பாகிஸ்தானில் கைது

(மும்பை)

இந்திய மீனவர்கள் 12 பேர் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தியா, பாகிஸ்தான் கடல் எல்லையை தாண்டி மீன்பிடிக்கும் மீனவர்களை இரு நாட்டு கடற்படையினரும் கைது செய்துவருகின்றனர்.

இந்நிலையில் பாகிஸ்தான் கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 12 இந்திய மீனவர்களை கைது செய்துள்ளதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்களிடமிருந்து 2 படகுகள், மீன்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட மீனவர்கள் கராச்சி பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் மட்டும் கடல் பாதுகாப்பு அமைப்பின் வீரர்கள் 122 இந்திய மீனவர்களை கைது செய்துள்ளதாகவும் அவர்களை விடுவிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (எ)

# பொன்சேகாவிற்கு கேக் வழங்க சிறைச்சாலை அதிகாரிகள் மறுப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பிறந்த தினம் நேற்றாகும். பிறந்த தினத்தை முன்னிட்டு ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் சரத் பொன்சேகாவை சிறைச்சாலைக்கு சென்று பார்வையிட்டுள்ளனர்.

கட்சியின் இணைப்பிரதி தலைவர்களான கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாச, நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, பாலித ரங்கே பண்டார மற்றும் பாலித தெவரப்பெரும ஆகியோர் சிறைச்சாலைக்கு சென்று சரத் பொன்சேகாவை பார்வையிட்டுள்ளனர்.

பிறந்த நாளை முன்னிட்டு பாலித ரங்கே பண்டாரவும் பாலித தெவரப் பெருமவும் கேக் ஒன்றை சிறைச்சாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

ஏனினும், இந்தகேக்கை சரத் பொன்சேகாவிற்கு வழங்கக்கூடாது என சிறைச்சாலை அதிகாரிகள் மறுப்பு வெளியிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இணையத்தளங்கள் மீது தீவிர கண்காணிப்பு!

## அமைச்சர் கரலியத்த தெரிவிப்பு

(கொழும்பு)

இணையத்தளங்கள் தீவிரமாக கண்காணிக்கப்படும் என சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு முதல் இணையதளங்கள் குறித்த கண்காணிப்பை அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதனை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பேஸ் புக் சமூக வலையமைப்பு உள்ளிட்ட இணையத்தளங்கள் தொடர்பில் அடுத்த ஆண்டு முதல் கண்காணிப்பு நடத்தப்படும். சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை தடுக்கும் நோக்கில் நீதியமைச்சுடன் இணைந்து செயற்பட திட்டமிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இணைய மற்றும் ஊடகங்களும் இந்த நிலைமைக்கு பொறுப்பு சொல்ல வேண்டும்.

இந்த ஆண்டில் மட்டும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் 7 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சிறுவர் சமூகத்தை சீர்குலைக்கும் வகையில் சில தொலைக்காட்சி நிறுவனங்கள் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்து வருகின்றன. இணையத்தளப் பாவனை தொடர்பில் பெற்றோர் கூடுதலாக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். யுத்தம் இடம்பெற்ற காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச் செயல்கள் தொடர்பிலான தகவல்கள் வெளியிடப்படவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (எ)

# பஸ்-மோ.சைக்கிள் விபத்து இரு இளைஞர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் இலங்கை வட பிராந்திய போக்குவரத்துச்சபைக்கு சொந்தமான பஸ்சும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றிரவு 8.10 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

யாழ். பேருந்து நிலையத்திற்கு பஸ் திரும்பும்போது இவ்விபத்து இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் முத்திரைச்சந்தியை சேர்ந்த பரமானந்தன் வானுஜன் (வயது 19), பஞ்சலிங்கம் ரிஷிகரன் (வயது18) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நண்பர் ஒருவரின் தாயார் வைத்தியசாலையில் உயிரிழந்த நிலையில் அவரின் சடலத்தை பொறுப்பேற்கச் சென்ற சமயம் இவ்விபத்து இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. (எ-11)

# ஒளிவிழா பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் ஒளிவிழா தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 22ஆம் திகதி பிற்போடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் ரா.விஜயலட்சுமி அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வு இன்று நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

**தவறிவிட்டது**

குலநாதன் பிரசாந் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை(911991837V) தாவடிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 0778435224 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(C-5223)

**வீடு விற்பனைக்கு**

நகரின் மத்தியில் அப்போலோ ஆஸ்பத்திரிக்கு முன்பாக பலாலி வீதி, பருத்தித்துறை வீதி என்பவற்றிக்கு அருகாமையில், வியாபாரத்திற்குகந்த சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. வாகன தரிப்பிட வசதி உண்டு.

தொடர்புகளுக்கு

077 8767947, 021 5670238

1/13, 2ம் ஒழுங்கை,

பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(6981)

**தவறிவிட்டது**

உடுவில் தெற்கு, புதுமடத்தில் வசிக்கும் பூலோகராசா அமில்ராஜ் ஆகிய என்னுடைய தேசிய அடையாள அட்டை (842343135V) கொழும்பில் 05.12.2011இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

TP:- 0775080901

(C-5221)

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை.

குறிப்பு: மாநகர சபைக்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 0727122944, 0774661237

(6991)

## இன்று ஒரு தகவல்

### நல்ல நகைச்சுவை

ஒரு வீடு. கதவு மூடியுள்ளது. அந்த வெளிக்கதவிலே பூட்டு ஒன்று தொங்கவிடப்பட்டிருந்தது.

வீட்டில் இருந்தவர்கள் வெளியிலே செல்லும்போது பூட்டை பூட்டாமல் வீதியில் இறங்கி விட்டார்கள். அதனால் திறந்தபடியே அது தொங்கிக் கொண்டிருந்தது. தெருவில் சென்று கொண்டிருந்த ஒரு பையன் அதை அவதானித்துவிட்டான்.

உடனே மெதுவாக அந்தக்கதவிற்கு அருகில் சென்றான். அந்தப் பூட்டையெடுத்து சட்டைப் பையினுள் வைத்துக் கொண்டு அவ்விடத்தைவிட்டு அகன்று செல்ல ஆரம்பித்தான்.

கலைவாணர் சிறிது தூரத்தில் இருந்துகொண்டு இவற்றையெல்லாம் அவதானித்துக் கொண்டிருந்தார்.

"தம்பி...! இங்கே வா!" என்று கூப்பிட்டார்.

அவனும் தான் திருடியதைக் காட்டாமல் மெதுவாக இவர் அருகில் வந்து நின்றான்.

''தம்பி! பையிலே என்ன இருக்கிறது?'' என்று கேட்டார்.

"அது... வந்து... ஒன்றுமில்லையே!" என்று பையன் கூறினான்.

''எங்கே... காட்டு பார்க்கலாம்...!'' என்று சொல்லி அவனது சட்டைப்பையினுள் கையை விட்டார். அங்கே பூட்டு.

கையும் களவுமாக அவன் பிடிபட்டு விட்டான்.

''ஐயா! தெரியாமல் செய்துவிட்டேன்... என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்!'' என்றான்.

"ஏன் இதை எடுத்தாய்?" என்றார்.

"பசி... அதனாலேதான் எடுத்தேன்... பழைய பொருள் விற்கும் கடையில் கொண்டு போய் கொடுத்தால், இரண்டு ரூபாய் கிடைக்கும். இதை விற்றெடுக்கும் பணத்தின்மூலம் சாப்பாடு வாங்கி சாப்பிடலாம் என்று நினைத்து எடுத்தேன்...!'' உண்மையைச் சொல்லி விட்டான் அந்தப் பையன்.

இவர்கள் இருவரும் இப்படிக் கதைத்துக் கொண்டிருக்கும்போது வீட்டுச் சொந்தக்காரர் வெளியே வந்தார். கதவிலே பூட்டு இல்லாமல் இருந்ததைப் பார்த்தார். வீதியிலே கலைவாணர் ஒரு பையனிடம் பேசிக் கொண்டிருந்ததையும் பார்த்தார்.

அந்தப் பையன்தான் பூட்டை எடுத்திருப்பான் என யூகம் செய்து கொண்டார்.

மிகவும் ஆத்திரமடைந்து அவர்களை நோக்கி நடந்தார்.

இதை அவதானித்த பையன் கலைவாணரை மிகவும் பரிதாபமாகப் பார்த்தான். ''என்னைக் காட்டிக் கொடுக்க வேண்டாம்'' என்ற மாதிரி அவனது பார்வை இருந்தது.

கலைவாணர் ஒருகணம் யோசித்தார். அந்த வீட்டுக்காரரும் இவர்களை நெருங்கி அருகில் வந்துவிட்டார். கலைவாணர் சிரித்துக்கொண்டு அவரைப் பார்த்து... "வாருங்கள், வீட்டுக் கதவில் பூட்டைக் காணவில்லையென பார்க்கிறீர்களா? சிறிது நேரத்துக்கு முன்பு யாரோ ஒரு பையன் அந்தப் பூட்டை எடுத்துக் கொண்டு ஓடினான். இதோ! இந்தத் தம்பிதான் அவனை விரட்டிப் பிடித்து பூட்டைப் பறித்து திருப்பி எடுத்துத்தந்தான். நான் அதை வைத்துள்ளேன். இதோ உங்களின் பூட்டை வைத்து கொள்ளுங்கள்'' என்று கொடுத்தார்.

''பாவம்... பையன். மிகவும் கஷ்டப்பட்டு அவனைப் பிடித்துவிட்டான். இவனுக்கு இரண்டு ரூபாய் கொடுத்தனுப்புங்கள்'' என்றார்.

கலைவாணனின் அந்தச் செயல் சிரிக்கவும் வைக்கும். சிந்திக்கவும் வைக்கும்...

அதுதான் ஒரு நல்ல சுவையின் இலக்கணம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## மாங்குளத்தில் சந்தை அமைக்கக்கோரி முல்லை.அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

(மல்லாவி)

மாங்குளம் நகர சந்தை யுத்தத்தினால் தரைமட்டமாகிய நிலையில் இயங்காமல் உள்ளது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பாதிக்கப்பட்டுள்ள இப்பொதுச்சந்தையை உடன் அமைத்து தருமாறு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் உற்பத்தியாளர், கொள்வனவாளர்கள், நுகர்வோர் ஆகியோர் இணைந்து முல்லை மாவட்ட அரச அதிபருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் மகஜர் அனுப்பியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது, வன்னி இடம்பெயர்விற்கு முன் மாங்குளம் நகரத்தில் சகல வசதிகளும் கொண்ட பொதுச்சந்தை ஒன்று இயங்கியது. போர் முடிவடைந்து மக்கள் மீண்டும் மீள்குடியேறி இரண்டரை வருடங்களுக்கு மேலாகியும் மேற்படி சந்தை ஆரம்பிப்பதற்குரிய ஒழுங்குகளை இச் சந்தைக்குரிய பிரதேச சபையினர் மேற்கொள்ளவில்லை இது தொடர்பாக மக்களும் பொது அமைப்புக்களுடைய பிரதிநிதிகளும் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்ட போதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இதனால் மேற்குறித்த பகுதி மக்கள் மகஜர் ஒன்றை அரச அதிபருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

உற்பத்தியாளர் தமது உற்பத்திப் பொருட்களை பல ரூபா செலவு செய்து மல்லாவி, கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களில் உள்ள சந்தைகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்ய வேண்டியுள்ளது. அத்தோடு நுகர்வோருக்கும் தமக்குரிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தூர இடங்களுக்கு சென்று கொள்வனவு செய்து வருகின்றனர். எனவே மேற்குறித்த பகுதியில் சந்தை இயங்குவதற்குரிய நடவடிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-15)

## மாங்குளம் பிரதேச மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

நல்லொழுக்க முன்னேற்ற நிலையம் என்ற சமூக சேவை நிறுவனம் போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறியுள்ள மாங்குளம் பிரதேசத்தில் வாழும் குடும்பங்களுக்கு உதவி வழங்க முன்வந்துள்ளது.

மேற்படி நிறுவனம் இப்பிரதேச மக்களின் நிலையைக் கருத்திற் கொண்டு மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் 435 மாணவர்களுக்கு எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. இக்கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மாங்குளம் மகாவித்தியாலயத்தில் வழங்கப்படவுள்ளது.

இதில் கற்றல் உபகரணங்கள் 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொதி என குறிப்பிடப்படுகின்றது. இந்நிகழ்வில் மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தவறாது கலந்து கொண்டு தமக்குரிய அன்பளிப்பு பொதிகளை பெற்றுக் கொள்வதுடன் இதுவரை இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்குரிய அனுமதி இலக்கத்தை பெறாத மாணவர்கள் அதிபருடன் தொடர்பு கொண்டு தமக்குரிய அனுமதி இலக்கத்தை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தவிர்க்க முடியாத காரணத்தால் சமூகமளிக்க முடியாது இருக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் தம்முடன் தொடர்பு கொண்டு இதற்குரிய அனுமதி இலக்கத்தை பெற்றுக் கொள்ளுமாறு மாங்குளம் மகாவித்தியாலய அதிபர் ப.இரவீந்திரநாதன் கேட்டுள்ளார். (அ-3-15)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 120 | 75 |
| பச்சைமிளகாய் | 330 | 200 | 300 |
| தக்காளி | 150 | 190 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 30 |
| கோவா | 80 | 100 | 90 |
| கரட் | 80 | 120. | 100 |
| பூசணி | 60 | 60 | 70 |
| புடோல் | 50 | 70 | 90 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 65 | 100 | 70 |
| பாகற்காய் | 150 | 180 | 90 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 |
| பயற்றங்காய் | 150 | 120 | 140 |
| லீக்ஸ் | 100 | 110 | 50 |
| பீற்றூட் | -- | 120 | 70 |
| கறிமிளகாய் | -- | 210 | 140 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 140 | 200 | 130 |
| கத்தரிதம்புள்ள | 70 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 180 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 25 | 25 |

## இராசி பலன்

19.12.2011

(மார்கழி 03, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு

நவமி பிற்பகல் 12.48 மணிவரை

அத்தம் பிற்பகல் 5.04 மணிவரை

இராகுகாலம் 7.53-9.23 மணிவரை

சுபநேரம் 12.23-1.53 மணிவரை

**மேடம்**



உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், விருந்து விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், தொழிலில் இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்**



விருந்தினரை வரவேற்று மகிழும் நாள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவெடுப்பீர்கள், சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புத்திரர்களின் தேவைகள் பூர்த்தியாகும்.

**மிதுனம்**



சந்தோசமான அனுபவங்கள் ஏற்படும் நாள், நண்பர்கள் மத்தியில் நற்பெயர் கிடைக்கும், பெற்றோர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், விருந்தினர் வருகையுண்டு.

**கடகம்**



பெரியோர்களின் ஆசி கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், சகோதர ஒற்றுமை பலப்படும், பிரயாண நன்மையுண்டு.

**சிங்கம்**



சிறப்பான நாள், பொருளாதார வளர்ச்சி கூடும், சுபசெய்தியொன்று சுற்றத்தார் மூலம் வந்து சேரலாம், புதிய முயற்சிகளில் நாட்டம் காட்டுவீர்கள், திடீர் விவாதங்கள் ஏற்படலாம்.

**கன்னி**



வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் தொடர்பால் விரும்பிய காரியம் நிறைவேறும், வேலைச்சுமை குறையும், உடல் நலம் சீராகும்.

**துலாம்**



சுப விரயம் ஏற்படும் நாள், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெரியோரின் சொற்படி நடப்பது நல்லது.

**விருச்சிகம்**



சுப செய்திகள் வீடு வந்து சேரலாம், வீட்டுக்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், உறவினர் பகை அகலும், வருமானம் திருப்தி தரும்.

**தனுசு**



செல்வாக்கை காப்பாற்றி உறவினரின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்பால் மதிப்பும் மரியாதையும் உயரும், ஆரோக்கியமான நாள்.

**மகரம்**



எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், தேகநலனில் தெளிவு பிறக்கும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கும்பம்**



ஆலய வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படலாம், நண்பர்கள் மனங்கோணாது நடந்து கொள்வது நல்லது.

**மீனம்**



வருமானம் திருப்தி தரும், உறவினரால் பாராட்டப்படும் சூழ்நிலையுண்டு, வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது, கனவு பலிதமுண்டு.

வளவன்

# முற்றோதல்

(மருதங்கேணி)

பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் ஆலய வீதியிலுள்ள பரந்தாமன் ஆச்சிரமத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமை வரை திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

முற்றோதல் நிகழ்வின் நிறைவில் மகேஷ்வர பூசையும் நடைபெறவுள்ளது என நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.(அ-35)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையினரால் நடத்தப்படும் ஜே/75 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்கள் பங்கேற்புடனான கிராமஅபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பை வழங்குமாறு யாழ். மாநகர சுற்றாடல் அதிகாரி ரி.என்.சூரியராஜா அறிவித்துள்ளார். (அ)




# இன,மத,மொழி பேதமின்றி அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டில் நாம் எல்லோரும் ஒரே இனத்தவராக் இணைந்து வாழக்கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒத்துழைப்புடன் நீதிநியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டத்தின் கீழ் வடக்கு-தெற்கு எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் சந்திப்பு ஒன்று நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-தெற்கு எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான இந்தச் சந்திப்பு சமூகத்திற்கு சிறந்ததொரு அறிவினை எதிர்காலத்தில் கொடுக்கக்கூடிய ஒரு செயற்றிட்டமாக அமையும்.

நீண்டகாலமாக இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தம் மக்கள் மத்தியில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது.

இன்றும் அப்பிரச்சினைகள் தொடர்ந்து வண்ணமேயுள்ளன. இதில் நாம் ஒருவரும் இரகசியம் பேணமுடியாது.

பல இனங்கள் பலவிதமான உணர்வுகளை வெளிப்படுத்தியதே இந்த அழிவுகளுக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

நாம் எல்லோரும் இன, மொழி, மத வேறுபாடின்றி இணைந்து செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படுவோமேயானால் கடந்த காலங்களில் ஏற்பட்ட அழிவுகள் எதிர்காலத்தில் ஏற்படாது தவிர்த்துக் கொள்ள முடியும்.

மேலும் போரினால் இளைஞர், யுவதிகள் தவறான பாதைகளுக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களை நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பும் எமக்குண்டு.

இதனைக் கருத்திற் கொண்டு இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சிப்பட்டறை ஒன்றையும் எமது அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த கால யுத்த நிலை எமது நாட்டின் பொருளாதாரத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனை ஏதிர்காலத்தில் நிவர்த்தி செய்ய வேண்டும்.

சமூக மறுமலர்ச்சிக்கு ஏற்ப இலக்கியவாதிகளும் ஊடகவியலாளர்களும் செயற்பட வேண்டும்.

எனவே ஒவ்வொருவரும் தனிப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்தாது ஒரே இனமாக மனிதத் தன்மையுடன் இருக்கின்ற, மானிடப் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற உணர்வுகளுடன் படைப்புக்களை வெளிப்படுத்தி நாட்டின் சமாதானத்தை மேலும் வலுப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த சந்திப்பில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளரும் முன்னாள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருமான நிக்கலஸ்பிள்ளை, அமைச்சின் ஒருங்கிணைந்த செயலாளர் கலாநிதி மோகன், வடக்கு-தெற்கு எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# இராஜகிராமம் பகுதி மக்கள் குடிநீருக்காக நீண்டதூரம் அலைவு

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(பருத்தித்துறை)

கரவெட்டி இராஜகிராம மக்கள் அடிப்படை வசிதிகள் இன்றி நீண்டகால்மாக கஷ்டத்தின் மத்தியிலேயே வாழ்ந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதி மக்களுக்கு குடிப்பதற்கு குடிநீர் வசதி மற்றும் போக்குவரத்து செய்வதற்கேற்ற சீரான வீதி போன்றவை இல்லாது மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இம்மக்கள் குடிநீர் பெற்றுக்கொள்ள பல மைல்தூரம் செல்ல வேண்டிய அவல நிலை உள்ளது.இவர்களது அடிப்படை வசதிகள் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியபோதிலும் இதுவரை எவரும் நடவடிக்கை எடுக்காமையால் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்குறித்த பகுதி மக்களின் பிரதான தேவைகளான குடிநீர்,மின்சாரம், போக்குவரத்து செய்வதற்குரிய சீரான வீதி போன்றவற்றை சீர்செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-10)

# இனந்தெரியாத நபர்களால் வயோதிபர் தாக்கப்பட்டார்

(கரவெட்டி)

வடமராட்சிப் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்ட வயோதிபர் படுகாயமடைந்துள்ளார்.இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவது,

குறித்த வயோதிபர், மனைவி, இரண்டு பிள்ளைகள் ஆகியோர் வீட்டில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவேளை வீட்டில் உட்புகுந்த இனந்தெரியாத நபர்கள் கூரிய ஆயுதங்களால் வயோதிபரின் தலையில் தாக்கியதுடன் வெட்டியுள்ளதாகவும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் அல்வாய் கிழக்கு அத்தாய் பகுதியை சேர்ந்த சின்னத்தம்பி கருணபிரகாசம் (வயது-80) என்ற வயோதிபரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வயோதிபர் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. ஆயினும் இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-24)

# அரையிறுதி ஆட்டத்திற்கு நான்கு அணிகள் தெரிவு

(கரவெட்டி)

இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கெட் போட்டிகளில் 4 அணிகள் அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

வடமராட்சிக்குட்பட்ட 36 கழகங்கள் பங்குபற்றிய 16 ஓவர் 11 பேர் கொண்ட போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணி, மாலுசந்தி மைக்கல் அணி, அல்வாய் நியூபவர், கரவெட்டி ஐங்கரா ஆகிய அணிகள் அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

இதில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மாலுசந்தி மைக்கல் அணியும் கரவெட்டி ஞானம்ஸ் அணியும் மோதவுள்ளன.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கரவெட்டி ஐங்கரா அணியும் அல்வாய் நியூபவர் அணியும் மோதவுள்ளன. (அ-3-24)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை சந்தியில் இருந்து பருத்தித்துறை முனை வரையுள்ள வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையால் பயணம் செய்வதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

இவ்வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுவதால் மழைநீரானது தேங்கி நிற்பதால் விபத்துக்கள் ஏற்படுகின்றது.

இவ்வீதியால் ஆயிரக்கணக்கான மக்களும் நூற்றுக்கணக்கான வாகனங்களும் பயணம் செய்கின்றன.

அத்தோடு இவ்வீதி 751 இலக்க பேருந்துகளிற்குரிய பாதையாகும்.

எனவே உரிய தரப்பினர் இவ்வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)



செட்டித்தெரு அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் பரிசளிப்புவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலைநிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# விக்கிலீக்ஸ் நிறுவனரின் மேன்முறையீட்டு மனுவை பிரிட்டன் விசாரணைக்கு ஏற்றது

(லண்டன்)

பிரபல இணையத்தளமான விக்கிலீக்ஸ் நிறுவுனர் அசாஞ்சேயின் மேன்முறையீடு மனுவை விசாரணைக்கு இங்கிலாந்து உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றது.

அவுஸ்திரேலியாவை தலைமையிடமாக கொண்டு செயற்படும் விக்கிலீக்ஸ் இணையத்தளம் பல முக்கிய விடயங்களை அம்பலப்படுத்தி உலகம் முழுவதும் பிரபலமாகி உள்ளது. உலக நாடுகள், தலைவர்கள் குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளின் அரசியல், பொருளாதாரம், புலனாய்வு தொடர்பான இரகசிய தகவல்களை கடுமையான எச்சரிக்கையையும் மீறி வெளியிட்டது. இதனால் அந்த இணையத்தளமும் அசாஞ்சேயும் பிரபலமடைந்தனர். இந்தநிலையில் அசாஞ்சே பாலியல் குற்றச்சாட்டுக்கு ஆளானார்.

இது தொடர்பான வழக்கு இங்கிலாந்து தலைநகரான லண்டன் நீதிமன்றில் நடைபெற்று வருகிறது. தம்மீது அரசியல் ரீதியான பழிவாங்கும் நடவடிக்கை இது என்றும் தாம் குற்றமற்றவன் என்றும் 40 வயது அசாஞ்சே கூறி வருகிறார். அவரிடம் விசாரிக்க வேண்டும். அதனால் அசாஞ்சேவை நாடு கடத்த அனுமதிக்க வேண்டும் என்று சுவீடன் நாட்டு அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர். இதற்கு லண்டன் உயர்நீதிமன்றம் சம்மதித்தது.

இந்தநிலையில் நிபந்தனை பிணையில் வெளிவந்த அசாஞ்சே, நாடு கடத்த பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து இங்கிலாந்து உச்ச நீதிமன்றில் மேன்முறையீடு செய்ய அனுமதிக்கக்கோரி லண்டன் உயர்நீதிமன்றில் அசாஞ்சே மனுத்தாக்கல் செய்தார். .இதை விசாரித்த உச்சநீதிமன்றம் உச்ச நீதிமன்றில் அப்பீல் மனுத்தாக்கல் செய்ய அனுமதித்தது. இதனையொட்டி உயர்நீதிமன்றில் அப்பீல் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

அசாஞ்சேவும் மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீது வருகின்ற பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் இரண்டு நாட்கள் நடைபெறும் என்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.(அ-2)

# ரயிலில் பயணித்த நபர் கொலை செய்யப்பட்டார்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த உடரட மெனிக்கே இரவு நேர புகையிரதத்தின் உறங்கும் பெட்டியில் இருந்த உதவியாளர் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

புகையிரதத்தினுள் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம் பெற்றிருக்கலாம் எனவும் புகையிரதம் நாவலப்பிட்டி பிரதேசத்தின் ஊடாக பயணித்த போதே இந்த தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் புகையிரதத் திணைக்கள மட்டத்தில் ஆரம்பகட்ட விசாரணை இடம் பெறுவதாக அவர் தெரிவித்தார். (அ-2)

# இளைஞர்களிடையே மோதல்; ஒருவர் பலி

(வவுனியா)

வவுனியா ஸ்ரீராமபுரம் பகுதியில் இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் வவுனியா பொது வைத்திய சாலையில் சிற்றூழியராக பணிபுரிந்து வந்த (வயது-32) இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஸ்ரீராமபுரம் பகுதியில் உள்ள கயூ தோட்டம் பகுதியில் குறித்த நபரும் அவரது நண்பர்களும் மாலைப்பொழுதை கழித்து வந்த வேளை அவ்வீதியால் சென்ற மற்றுமொரு அறிமுகமான இளைஞரிடம் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி கைகலப்பாக மாறியபோது மேற்படி நபர் தலையில் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்ததாக கூறப்படுகின்றது.

இதேவேளை மேலும் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# ரணில், கரு தலைமைப்பதவியில் போட்டி இன்று நண்பகல் தேர்தல் நடக்கும்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்சியின் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும்-- இணைப்பிரதித்தலைவர் கரு ஜயசூரியவும் தமது நியமனப் பத்திரங்களை நேற்று தாக்கல் செய்துள்ளனர்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் தற்போது நடைபெறும் கட்சியின் விசேட செயற்குழுக்கூட்டத்திலேயே இவர்கள் தமது நியமனப்பத்தரங்களைத் தாக்கல் செய்துள்ளார்கள். ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் பெயர்கள் தலைமைப் பதவிக்குப் பிரேரிக்கப்பட்டுள்ளமையால் கட்சி யாப்பு விதிகளின் படி அதற்கான தேர்தல் நடத்தப்படவேண்டும்.

இதன்படி தலைமைப் பதவி உட்பட ஏனைய முக்கிய பதவிகளுக்கான தேர்தல் இன்று திங்கட்கிழமை நண்பகல் கட்சித் தலைமையகத்தில் நடத்தப்படும் எனவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்சியின் பிரதித்தலைவர், தேசிய அமைப்பாளர் பதவிகளுக்கும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டிருப்பதால் அந்தப் பதவிகளுக்கும் தேர்தல்கள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்கு ரவி கருணாநாயக்கவும் சஜித் பிரேமதாசவும் போட்டியிடுகின்றார்கள். தேசிய அமைப்பாளர் பதவிக்கு தயாசிறி ஜெயசேகர மற்றும் தயாகமகே ஆகியோரும் போட்டியிடுகின்றார்கள்.ஐ.தே.க.வின் விசேட செயற்குழுவின் கூட்டம் நடைபெறுவதை முன்னிட்டு கட்சித் தலைமையகமான சிறிகொத்தா அமைந்துள்ள பகுதிகளில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-2)

# கூட்டமைப்பு நண்பர்களுக்கு நீங்கள் அறிவுரை கூறுங்கள்

## ஜனாதிபதி மனோவிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண நான் தயார். ஆனால் கூட்டமைப்பு தயார் இல்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசனிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலையில் மனோ கணேசனை அவரது பிறந்தநாளன்று தொலைபேசியில் அழைத்து வாழ்த்து தெரிவித்த போதே ஜனாதிபதி இதை கூறியுள்ளார். இனப்பிரச்சினைக்கு தீர்வு காண நான் தயார். ஆனால் கூட்டமைப்பு புலிகளை போல் செயற்படுகிறது. எனவே உங்கள் கூட்டமைப்பு நண்பர்களுக்கு அறிவுரை கூறுங்கள் என ஜனாதிபதி கூறியுள்ளது. .

பிறந்தநாள் வாழ்த்துக்கு நன்றி தெரிவித்த மனோ ஜனாதிபதியிடம் தனது பிறந்தநாள் விரும்பம் ஒன்று இருக்கிறது. என்று கூறிய போது கூறுங்கள் என்ன செய்ய வேண்டும் என ஜனாதிபதி பதில் அளித்தார். நீண்டகாலமாக இழுபறிபட்டுவரும் தேசிய இனப்பிரச்சினைக்கு பிறக்க போகும் புதிய வருடத்தில் நீங்கள் கட்டாயமாக தீர்வு காண வேண்டும் என்பதே என் ஒரே விருப்பம் என மனோ கணேசன் கேட்டதற்கு பதிலாகவே ஜனாதிபதி இதை கூறியுள்ளார்.

இதற்கு பதில் அளித்த மனோகணேசன் நீங்கள் இன்று இந்நாட்டில் சிங்கள மக்களின் பேராதரவை பெற்ற தலைவர். இனிமேல் எதிர் காலத்திலும் எந்த ஒரு சிங்கள அரசியல் தலைவருக்கும் இந்த தகைமை கிடைக்கும் என்பது சந்தேகம் தான். எனவே உங்கள் காலத்தில் நீங்கள் ஒரு நியாயமான தீர்வை கொண்டு வந்தால் அதை தென் இலங்கை தீவிரவாதிகள் எதிர்க்கமாட்டார்.

தென் இலங்கை தீவிரவாதிகள் உங்களை எதிர்க்கும் சாத்தியம் மிகவும் குறைவு மேலும் நீங்கள் இந்நாட்டின் சிங்கள மக்களுக்கு மாத்திரம் தலைவர் அல்ல. அனைத்து மக்களுக்கும் ஜனாதிபதி என்பதாலேயே இதை சொல்கிறேன் என மனோகணேசன் மேலும் ஜன்ாதிபதியிடம் கூறியுள்ளார். (அ-2)

# கொடக்கவெலவில் கடுங்காற்று 15 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டது

(கொழும்பு)

கொடக்கவெல,லிங்கம பகுதியில் வீசிய கடும் காற்றினால் 15 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

இரத்தினபுரி பிரதேசத்தில் நேற்று முன் தினம் வீசிய கடும்காற்றின் காரணமாகவே இந்த சேதம் ஏற்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி கூறினார்.

மாவட்டச்செயலாளர் உட்பட ஏனைய அதிகாரிகளின் உதவியுடன் சேத விபரங்கள் குறித்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இடர் முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் குறிப்பிடுகின்றார். (அ-2)


# பரீட்சை மோசடிக்கு உதவிய சந்தேகநபர் பிணையில் விடுதலை

கொழும்பு)

கல்கிஸ்ஸ பிரதேசத்தின் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நிலையமொன்றில் இடம்பெற்ற பரீட்சை மோடிக்கு உதவியதாக கூறப்படும் மூன்று சந்தேகநபர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கல்கிஸ்ஸ நீதாவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னரே சந்தேகநபர்களுக்கும் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது பரீட்சை மோசடி சம்பவம் தொடர்பில் நான்கு மாணவர்கள் உட்பட எட்டு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதான இரண்டு மாணவர்கள் சார்பாக வேறு இரண்டு மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியுள்ளமை தெரியவந்துள்ளது. இந்த மாணவர்களுக்கு போலி அடையாள அட்டை தாயரித்துக்கொடுத்தல் மற்றும் அதற்கு உடந்தையர்க இருந்தமை ஆகியன தொடர்பில் ஏனைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். (அ-2)



அனலைதீவு 7 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள புதுவாழ்வு மிசனறி சபைக்கான வேலைத்திட்டத்தின் போது ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் ஊர்காவற்றுறை பிரதேச அமைப்பாளர் ஜெயகாந்தன், போதகர் கே.தெய்வேந்திரம் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம். இதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிதி ஒதுக்கீடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தூதரகங்களுக்கு வழங்கப்படவில்லை

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களுக்கு வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளிநாட்டு தூதரகங்களுக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பி வைக்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சரத் தசாநாயக்க தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வமாக அறிக்கையை வழங்கும் திட்டம் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.


அறிக்கையின் உத்தியோகபூர்வ பிரதி இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையை இணையத்தில் பார்வையிட முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அறிக்கையை உத்தியோகபூர்வமாக வெளியிட வேண்டிய அவசியம் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சிறையில் வாடும் ஆயிரக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகளிற்காகவும் நாம் போராடுகின்றோம்

## விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு



(கொழும்பு)

**சரத் பொன்சேகாவை எமது கதாநாயகனாக நாம் ஒரு போதும் கருதியது இல்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பிரதான ஜனாதிபதி வேட்பாளராக களம் இறக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ, சரத் பொன்சேகா ஆகியோருக்கு எதிராக நான் நாடு முழுவதும் சென்று பிரசாரம் செய்தேன். சரத் பொன்சேகா ஒரு அரசு உயர் அதிகாரியாக அரச உத்தரவிற்கு செயற்பட்டவராக இருந்தாலும் அவரின் கருத்துக்கள் பேரினவாத கருத்தியலை பிரதிபலிப்பதாகவே அன்று காணப்பட்டது என விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் தொடர்பாக பொன்சேகா கனடாவில் வழங்கிய செய்தியும் இங்கே ஊடகங்களுக்கு அவர் அவ்வப்போது வழங்கிவந்த செய்திகளும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரானதாகவே அமைந்திருந்தன.

எனவே, ஜனாதிபதித் தேர்தலில் நாம் அவரை பொது வேட்பாளராக ஏற்கவில்லை. எமது நிலைப்பாட்டுடன் மேற்படி தேர்தலில் நான் போட்டியிட்டேன். தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தியும் யுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் நான் ஜனாதிபதித் தேர்தலில் வலியுறுத்தி வந்தேன்.

ஆனால், தமிழ் மக்கள் எனக்கு மிகக் குறைவாகவே வாக்களித்தனர். இவருக்கு எதிராக அரசாங்கம் பல குற்றச்சாட்டுக்களை சுமத்தி இன்று அவரை சிறைக்கு அனுப்பியுள்ளது. இதற்கு எதிராக நாம் போராடி வருகின்றோம். சரத்பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி நடத்தப்படும் அனைத்து போராட்டங்களிலும் நாம் பங்கெடுத்து வருகின்றோம்.

இவர் ஒரு யுத்த காலப்பகுதி கதாநாயகன் என்பதற்காக நாம் அவருக்காக போராடவில்லை. ஆட்சியாளர்கள் தமது சுய நலனுக்காக ஜனநாயகத்துக்கு விரோதமாக ஒருவரை தண்டித்தமைக்காக நாம் போராடுகின்றோம். சரத் பொன்சேகாவிற்காக மாத்திரம் அல்ல சிறையில் வாடும் ஆயிரக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகளிற்காகவும் நாம் போராடுகின்றோம்.

இதில் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு எமக்கும் ஜனநாயக மக்கள் முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்திருந்தது. மேற்படி போராட்டத்தில் கலந்து கொள்வதாக இருந்தால் தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளை ஏற்பதாக இருந்தால் நாம் ஹைறக்பாக் திடல் போராட்டத்தில் பங்கு கொள்வோம் என நாமும் ஜனநாயக மக்கள் முன்னணியும் கோரிக்கை விடுத்திருந்தோம். ஐக்கிய தேசியக் கட்சி எமது இரண்டு கோரிக்கையையும் ஏற்பதாக விசேட செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்ததுடன் எமக்கும் அறிவித்திருந்தது.

மேலும் இத்தகைய போராட்டங்களில் நாம் கலந்து கொள்ளும் போது பேரினவாத ஆட்சியை கண்டிப்பதற்கு எமக்கு சந்தர்ப்பம் கிடைப்பதுடன் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வையும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையையும் வலியுறுத்துவதற்கு எமக்கு சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

தேர்தல் காலத்தில் சரத் பொன் சேகா தமிழ் மக்களினதும் தமிழ் அமைப்புக்களினதும் குறிப்பாக வெளிநாட்டில் இயங்கும் தமிழ் அமைப்புக்களினதும் கதாநாயகனாகவே திகழ்ந்தார்.

எனவே எமது நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை. அவர் அரசியல் செய்யும் போது அவருக்கு எதிரான எமது விமர்சனங்களை முன்வைத்தோம். அவர் மீது ஜனநாயகவிரோத செயற்பாட்டை பேரினவாதம் முன்வைத்தபோது அதைக் கண்டிக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## வளிமண்டலத்தை பாதுகாக்க விசேட வேலைத்திட்டம்

### சுற்றாடல் அதிகாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் வளிமண்டலத்தை பாதுகாக்கும் விசேட வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் முதல் வளிமண்டலத்தை பாதுகாப்பதற்கான விசேட உபகரணங்கள் பிரதான நகரங்களில் பொருத்தப்படவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் ச்சரித ஹேரத் தெரிவித்தார். இதன் மூலம் பிரதான நகரங்களில் வளிமண்டலத்தின் நிலை குறித்த தகவல்களை நாளாந்தம் பிரதிபலிக்கின்ற வகையில் அறிவித்தல் பலகைகளைப் பொருத்துவதற்கும் எண்ணியுள்ளதாக அவர் கூறினார்.

நாட்டின் வளிமண்டலத்தை தூய்மையாகப் பேணுவதற்குரிய நடவடிக்கைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் முன்னெடுக்கப்பட உள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார்.

ஆசியாவின் அசுத்தமான வளிமண்டலம் காணப்படுகின்ற நகரமாக கண்டி நகரம் திகழ்வதாக சிலர் விமர்சிக்க ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து வளிமண்டலத்தை தூய்மையாகப் பேணுவதற்கும் சுற்றுலாத்துறையின் மேம்பாடு கருதியும் நாட்டின் வளிமண்டலம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## மிஸ்கோல் கொடுத்து மூவரையும் காப்பாற்றுங்கள்

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய 3 பேரைக் காப்பாற்றவும், தூக்கு தண்டனைக்கு எதிரான மக்கள் கருத்துகளை ஒருங்கிணைக்கவும் மரண தண்டனை எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு சார்பில் கையடக்கத் தொலைபேசியில் தவறிய அழைப்பு கொடுத்து எதிர்ப்பை தெரிவிக்கும் நூதன பிரசாரத்தை தமிழ் திரைப்படத்துறையினர் ஆரம்பித்து வைத்தனர்.

இது குறித்து நடிகர் சத்யராஜ், கவிஞர் தாமரை, இயக்குநர்கள் வெற்றிமாறன், சீனு இராமசாமி ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது, தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய நிரபராதித் தமிழர்களைக் காப்பாற்ற பல்வேறு அரசியல் கட்சிகள், அமைப்புகளுடன் சேர்த்து மரண தண்டனை எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு போராடிக் கொண்டிருக்கிறது.

அதன் ஒரு கட்டமாக அந்த 3 பேரின் தூக்கு தண்டனைக்கு எதிரான மக்களின் கருத்துகளை ஒருங்கிணைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. மரண தண்டனைக்கு எதிரானவர்கள், தூக்கு தண்டனை சட்டத்தை இரத்து செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள், பேரறிவாளன், சாந்தன், முருகனை காப்பாற்ற விரும்புகிறவர்கள் **009192822-21212** என்ற தொலைபேசி எண்ணிற்கு தவறிய அழைப்புகள் கொடுங்கள். தவறிய அழைப்பு கொடுத்ததும் இணைப்பு நிறுத்தப்படும் வகையிலும், ஒரு தொலைபேசி எண்ணில் இருந்து ஒருமுறை மட்டுமே தவறிய அழைப்பு பதிவாகும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

20 இலட்சம் தவறிய அழைப்புகள் வந்தால் மரண தண்டனைக்கு எதிரான குரல்களின் வலிமையை மத்திய அரசுக்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் தெரிவிக்கலாம். மானுடன் மற்றும் நீதியின் மேல் அக்கறை உள்ளவர்கள் மேற்கண்ட எண்ணில் ஒரு இவ் அழைப்பு கொடுத்து மரண தண்டனைக்கு எதிரான உங்கள் எதிர்ப்பை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றார்கள். (அ-2)

## அடுத்த ஆண்டு தொடக்கம் மீனவர்கள் காப்புறுதி பத்திரம் வைத்திருப்பது அவசியம்

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் கடலுக்குச் செல்கின்ற சகல மீனவர்களும் காப்புறுதிப் பத்திரங்களை வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவிக்கின்றது.

அத்துடன் காப்புறுதிப் பத்திரம் இல்லாத மீன்பிடி படகுகளுக்கு அடுத்த வருடம் முதல் கடலுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படமாட்டாதென அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

பத்து மாதங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட மீனவர்களுக்கான இந்த காப்புறுதி முறைமையை பெற்றுக் கொள்வதற்கு மீனவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வேறு நாடுகளில் காப்புறுதி பெற்றுக் கொள்வது ஒவ்வொரு பிரஜைக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் ராஜித சேனாரத்ன, மீனவர்களுக்கு சார்பாகவே காப்புறுதி முறை தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த காப்புறுதி திட்டத்தின் மூலம் 750 ரூபா வருடாந்த பங்களிப்பை வழங்கும் மீனவர்கள் ஒரு இலட்சம் ரூபா காப்புறுதியையும் ஆயிரத்து 500 ரூபா பங்களிப்பை வழங்கும் மீனவர்கள் மூன்று இலட்சம் ரூபா வரையும் காப்புறுதி பெற முடியுமென அமைச்சர் மேலும் தெரிவிக்கிறார். (அ-2)


## புற்றளை சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை விசேட பொதுச்சபைக்கூட்ட அறிவித்தல் 2011 ஆம் ஆண்டு

அன்புடையீர்!

2011 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 24 ஆம் திகதி (24.12.2011) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இவ் ஆலய முன்றலில் தலைவர் சு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

- இறைவணக்கம்
- தலைவர் உரை
- சென்ற கூட்ட அறிக்கை
- வரவு செலவு அறிக்கையும் கணக்காய்வறிக்கையும்,
- யாப்பில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள்
- கோபுர வேலை தொடர்பான தீர்மானம்
- நன்றியுரை (சி-5222)

கௌரவ தலைவர் சு.கணேசலிங்கம் | கௌரவ செயலாளர் க.பரமநாதன்

# நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு சட்டத்தரணிகள் சங்கம் எதிர்ப்பு

(கொழும்பு)

**உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரின் நடத்தை குறித்து விசாரிப்பதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைப்பதற்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.**

நேற்று முன்தினம் ஏகமனதாக இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அச்சங்கத்தின் செயலாளர் மஹிந்த பி.கே.லொக்குகே விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது , இலங்கை அரசியலமைப்பின் 107 ஆவது சரத்தின் படி பதவியிலுள்ள நீதிபதியொருவருக்கு எதிராக இத்தகைய விசாரணை நடத்துவதற்கே அரசியலமைப்பில் இடமளிக்கப்பட்டுள்ள நிலையில் ஓய்வு பெற்ற நீதிபதியொருவரின் பதவிக்காலத்தில் மேற்கொண்ட நடத்தை தொடர்பாக விசாரிப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பதை சட்டத்தரணிகள் சங்கம் மிகக் கவலையுடன் நோக்குகின்றது.

சட்டத்தரணிகள் சங்க யாப்பின் 2 ஆவது சரத்தின் படி இச்சங்கமானது நீதிச்சேவையின் சுயாதீனத்தை நிலைநிறுத்தவும் பாதுகாக்கவும் உறுதி பூண்டுள்ளதுடன் மேற்படி நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கும் யோசனையை இச்சங்கம் திட்டவட்டமாகவும் உறுதியாகவும் ஆட்சேபிக்கிறது.

எனவே இத்தகைய நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு நாடாளுமன்றத்தை இச்சங்கம் கோருகிறது.

எவ்வாறெனினும் சட்டத்தரணிகள் சங்கமானது குறித்த குற்றச்சாட்டுக்களில் சொல்லப்பட்ட நடத்தைகளை மன்னிக்கவில்லை என்பதுடன் சங்கத்தின் இத் தீர்மானமானது சட்டத்தின் ஆட்சி குறித்த நலன்கள் மற்றும் நீதிச்சேவையின் சுயாதீனத்தையும் பக்கச்சார்பின்மையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்காக மாத்திரமே என்பதை வலியுறுத்துகிறது. இது எந்தவகையிலும் எந்த நபருக்கோ அல்லது அத்தகைய நபரின் நடத்தைக்கோ ஆதரவளிப்பதாக கருதப்படக் கூடாது (அ-2)

## 5000 காணிஉறுதிகள் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

அடுத்த வருடம் நடைபெறவுள்ள தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி கண்காட்சியை முன்னிட்டு 5 ஆயிரம் காணி உறுதிகள் அனுராதபுரம் மாவட்டத்தில் வழங்கப்படும் என்று காணி அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான பேச்சுவார்த்தை காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அசோக பீரிஸ் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டத்தில் காணி தொடர்பான முக்கிய பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.பிரதேசத்தில் சட்டவிரோதமாக காணிகளை வைத்திருப்போர் தொடர்பான விபரங்களும் கண்டறியப்பட்டுள்ளன.

சட்ட ரீதியான காணி உறுதிகளை வழங்குவதன் மூலம் இந்தப் பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடியும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. (அ-2)

# கேரள மனிதவுரிமை மீறல் குறித்து கேரள அரசின் நடவடிக்கை என்ன?



## சீமான் கேள்வி

கேரளத்தில் மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்து கொண்டுள்ளதாகவும் அங்கு வாழும் தமிழர்கள் தொடர்ச்சியாக தாக்கப்படுவதாகவும் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் குற்றம்சாட்டினார்.

இது குறித்து அவர் நேற்று முன்தினம் திருச்சியில் நிருபர்களிடம் கூறுகையில்,

முல்லைப்பெரியாறு அணை பிரச்சினைக்காக தமிழகத்தில் உண்ணாவிரதம் மேற்கொள்வதற்கு பொலிஸாரிடம் அனுமதி பெற வேண்டிய நிலை உள்ளது. இங்கு சுவரொட்டி ஒட்டினால்கூட வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

ஆனால் கேரளத்தில் மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது.

அங்கு வாழும் தமிழர்கள் விரட்டியடிக்கப்படுகின்றனர். தமிழகத் தலைவர்களின் உருவ பொம்மைகள் எரிக்கப்படுகின்றன. இந்த சம்பவங்களுக்கு கேரள அரசு எந்தவித வழக்கும் பதிவு செய்வதில்லை.

அதேவேளையில் முல்லைப்பெரியாறு அணை பிரச்சினைதொடர்பாக தற்போது தமிழகத்தில் அறவழியில் போராடினாலும் தமிழர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்படுவது வேதனை அளிக்கின்றது.

அறவழியில் போராடிய நாம் தமிழர் கட்சி தோழர்கள் திருச்சி, கோவை, மதுரை உள்ளிட்ட சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு நாளும் ஒரு சிறைக்கு சென்று கைது செய்யப்பட்ட தோழர்களை சந்தித்து வருகிறேன் என்றார். (அ-2)

# ஐ.தே.க.வும் ஜே.வி.பி.யும் அரசை கவிழ்க்க கனவு காண்கின்றன

## பிரதியமைச்சர் சேகுதாவூத் தெரிவிப்பு

(கொழும்பு)

4 ஆயிரம் அரேபியநாடுகளில் இடம்பெற்றதைப் போல தலைவர்கள் இன்றி போராட்டம் நடத்தி ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்று ஐ.தே.க, ஜே.வி.பி. கனவு கண்டு கொண்டிருக்கின்றது. அக்கனவு பலிக்காது என்று பிரதியமைச்சர் சேகுதாவூத் சபையில் நேற்று தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கூட்டுறவு உள்நாட்டுவர்த்தகம்மற்றும்கைத்தொழில் அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தலைவர்களே இல்லாத கட்சிகளான ஐ.தே.க., ஜே.வி.பி .மக்களை வீதியில் இறக்கி ஆட்சியைக் கவிழ்க்க கனவு காண்கிறது. அவர்களின் அரேபிய வசந்த கனவு பலிக்காது. 60 இலட்சம் வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதியின் ஆட்சியை 6 ஆயிரம் மக்களை வீதியில் இறக்கி ஆர்ப்பாட்டம் நடத்துவதன் மூலம் கவிழ்க்க முடியாது என்றார். (அ-2)

# அடுத்த வாரமளவில் க.பொ.த.(உ/த) பரீட்சை முடிபுகள் வெளியாகும்

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

க.பொ.த. உ/த பரீட்சை பழைய ,புதிய பாடத்திட்டங்களின் பிரகாரம் நடாத்தப்பட்டது.அதனால் இசட் புள்ளியை தயாரிப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. அதனை நிவர்த்திக்கும் வகையில் புதிய சூத்திரத்தின் மூலம் இசட் புள்ளி தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜனநாயக தேசியக் கூட்டணியின் எம்.பி. யான அனுரகுமார திஸாநாயக்க உயர்தர பரீட்சை பெறுபேறுகள் காலதாமதம் ஆவதற்குரிய காரணங்கள் என்ன என்று வினவினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் வாழ்க்கையில் விளையாட இயலாது. 3 இலட்சம் பரீட்சார்த்திகளின் இசட் புள்ளி தயாரிக்கும் பணி முன்னெடுக்கப்படுகின்றது. அடுத்த வாரமளவில் பெறுபேறு வெளியிடப்படும் என்றார். (அ-2)

# 7 நிறுவனங்கள் குறித்த குழு அமைக்கும் முயற்சி தடுப்பு

பொது நிறுவனங்களுக்கான சபையால் (COPE) இனங்காணப்பட்ட நட்டத்தில் இயங்கும் 7 அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை விசாரிப்பதற்காக தெரிவுக்குழுவை அமைக்கும் முகமாக எதிர்க்கட்சி பிரதம பேச்சாளரான ஜோன் அமரதுங்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கொண்டு வந்த பிரேரணையொன்று இடைநிறுத்தப்பட்டது.

நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு போதிய அளவு கால அவகாசம் கொடுக்கப்படவில்லையெனபிரதி சபாநாயகர் சமிந்த வீரக்கொடி இதற்கான காரணத்தை விபரித்து கூறினார். இப்பிரேரணையில் ஜோன் அமரதுங்க, ஐ.தே.க.பா.உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன ஆகியோர் கையெழுத்திட்டிருந்தனர்.

ஸ்ரீ ஜயவர்த்தன பொது வைத்தியசாலை சமுர்த்தி அதிகார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை விமான சேவை, மிகின் எயார் துறைமுக அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நிறுவ்னங்களில் நிதிவளம் பற்றி ஆராய்ந்து தொடர்ந்து நட்டத்தில் இயங்காமல் செய்வதற்கான பரிந்துரைகளை ஆராய்வதே இத் தெரிவுக் குழுவின் நோக்கமாகுமென ஐ.தே. கட்சியினர் கூறுகின்றனர். (அ-2)

# அரசின் நிர்வாக நடைமுறைகளை சீர்திருத்தும் வேலைத்திட்டம்


வினைத்திறனற்ற அமைச்சு செயலாளர்கள் பத்துப்பேரை சேவையிலிருந்து நீக்க அரசு தீர்மானித்துள்ளதாக சிரேஷ்ட அரச பேச்சாளர் ஒருவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அரசின் நிர்வாகநடைமுறைகளை சீர்த்திருத்தும் வேலைத்திட்டத்தின்கீழ் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, இவ்வாறு நீக்கப்படவுள்ளளோரில் பெரும்பாலானோர் அறுபது வயதைக் கடந்தவர்களாவார்கள். எனினும் அறுபது வயதைக் கடந்தும் இன்னமும் பணிபுரிந்து கொண்டிருக்கும் சிரேஷ்ட செயலாளர்கள் சிலரை இந்நடைமுறை பாதிக்கப்போவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீக்கப்படவுள்ள செயலாளர்களுக்குப் பதிலாக திறமையான இளம் அதிகாரிகள் சிலரையும் தனியார் துறையில் நிர்வாக நிபுணத்துவம் பெற்ற சிலரும் நியமிக்கப்படவுள்ளனரென அரச வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அரசின் பரிபாலன சீர்திருத்த நடவடிக்கைகளின் கீழ் அரச கூட்டுத்தாபன மற்றும் நியதிச் சபைகளின் 15 வினைத்திறனற்ற தலைவர்கள் நீக்கப்பட்டதன் உடன் நிகழ்வாகவே இந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நிறுவனத் தலைவர்கள் சம்பந்தமான இறுதித் தீர்மானம் இவ்வாரம் எடுக்கப்படவுள்ளது. (அ-2)





வடமாகாண சிறந்த அதிபருக்கான பிரதீபா பிரபா விருது ஜனாதிபதியால் யாழ்.வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் க.கனகராசாவிற்கு வழங்கப்பட்டதைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அபிவிருத்தி சங்கத்தினால் விழாநாயகன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் பட்டம் பெற்ற பாடசாலைஅதிபருடன் சிறந்த ஆசிரியர் வே. புவனேந்திரம், பிரதி அதிபர் ச.சோதிலிங்கம் ஆகியோர் நிற்பதனையும் படங்களிற் காணலாம்.

# ஆசியாவில் மாறிவரும் அரசியல் கணக்குகள்

கிழக்குமீதான அமெரிக்காவின் கவனயீர்ப்பு அலையானது ஒக்ரோபரில், “உலகின் கேந்திர • மற்றும் பொருளாதார ஈர்ப்பு மையமானது கிழக்கு நோக்கி நகர்கின்றது” என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் பிரகடனப்படுத்தியதிலிருந்து வெளிப்படையாகியுள்ளது.

இவ்வாறு **லைவ்மின்ற்** இணையத்தளத்தில் **யாமினி லோகியா** எழுதியுள்ள ஆய்வுக்கட்டுரையில்




அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா

தெரிவிக்கப்பட்டுள்ளது. அக் கட்டுரையின் முழுவிபரமாவது,

தற்போது காற்று வீசிக்கொண்டிருக்கிறது, இதன் திசை தற்போது மாறிக் கொண்டிருக்கலாம். ஆசியா மீதான சீனாவின் செல்வாக்கானது முன்னர் நம்பியது போன்று சவாலற்ற விடயமாக இருக்கமாட்டாது என்பதையே அண்மையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சில நகர்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

அதாவது, சீனாவின் ஏக செல்வாக்கு அதிகம் காணப்படும் கிழக்காசியாவில் அதாவது, பசுபிக்



சீன ஜனாதிபதி ஹூஜின்ரியோ

மாகடலை அண்டிய நாடுகளில் தனது அதிகாரத்தை அதிகரிப்பதில் முன்னர் தயக்கம் காட்டிய அமெரிக்காவின் தற்போதைய போக்கானது புதியதொரு பூகோள அரசியல் ஒழுங்கமைப்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கிழக்கு மீதான அமெரிக்காவின் கவனயீர்ப்பு அலையானது ஒக்ரோபரில், “உலகின் கேந்திர மற்றும் பொருளாதார ஈர்ப்புமையமானது கிழக்கு நோக்கி நகர்கின்றது” என அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்ரன் பிரகடனப்படுத்தியதிலிருந்து வெளிப்ப்டையாகியுள்ளது.

இதன்பின் வந்த மாதங்களில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அவுஸ்திரேலியாவுக்கு பயணம் செய்திருந்ததுடன், பசுபிக்கிற்கு அப்பாலான புதிய வர்த்தக உடன்படிக்கையொன்றில் கைச் சாத்திட்டிருந்தார். ஆனால், சீனா உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

அத்துடன் புதிய இராணுவத்தளமொன்றை அமைப்பதற்கான அறிவித்தலையும் அமெரிக்க ஜனாதிபதி மேற்கொண்டிருந்தார். ஆனால், அமெரிக்க கடற்படையினர் அதிகளவில் பசுபிக் மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியங்களில் குவிப்பதற்கான வேலைத்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

அத்துடன் அமெரிக்காவில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்புத் துறைக்கான நிதி நிலைக் குறைப்பானது ஆசியாவில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைகளையும் பாதிக்காது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது ஆசியாவின், அதிகரித்து வரும் அமெரிக்காவின் பொருளாதார நிலைப்பாட்டையே காட்டுவதுடன், சீனாவானது ஆசிய- பசுபிக் பிராந்தியங்களில் தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான விருப்பத்தை முறியடிப்பதை நோக்காகக் கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

21ஆம் நூற்றாண்டில் சீனாவின் அதிகரித்து வரும் இராஜதந்திர நகர்வானது வியட்நாம், சிங்கப்பூர் போன்ற கிழக்காசிய நாடுகளும் அவுஸ்திரேலியா போன்ற பசுபிக் வலைய நாடுகளும் வேறு பிராந்திய மற்றும் பூகோள செல்வாக்கு மிக்க அதிகார சக்திகளின் ( அமெரிக்கா, இந்தியா போன்றவையும் உள்ளடங்குகின்றன) தயவை நாட நிற்பந்தித்துள்ளது. அத்துடன் தனது பிராந்தியங்களில் சீனாவின் அதிகாரப்போக்கை முடிவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளுக்கும் வழிவகுத்துள்ளன.



இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங்

இந்தியாவுக்கு விற்காமல் சீனாவிற்கு யுரேனியத்தை விற்பதில் உள்ளார்ந்த நோக்கம் உள்ளதாக அண்மையில் அவுஸ்திரேலிய அரசாங்கம் சுட்டிக் காட்டியிருந்தது. அத்துடன் இந்தியாவுக்கு யுரேனியத்தை விற்பதை ஆரம்பிப்பதற்கான அளவீடுகளையும் அவுஸ்திரேலிய அரசாங்கம் பரிசோதித்துள்ளது.

ஜப்பான், இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகள் அமெரிக்காவுடன் ஆழமான இராணுவ உறவுகளைப் பலப்படுத்தியுள்ள அதேவேளையில் தென் சீனக் கடலில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

சீனாவின் ஆதரவுடன் இராணுவ ஆட்சி மேற்கொள்ளப்பட்ட மியான்மார்கூட அமெரிக்காவுடன் சிறந்த உறவைப் பேண ஆரம்பித்துள்ளது.



அவுஸ்திரேலியப் பிரதமர் ஜூலியாகிலாட்

கடந்த 50 ஆண்டுகளில் முதன் முதலாக மியான்மாருக்கு கடந்த மாதம் சுற்றுப் பயணம் செய்த அமெரிக்க மூத்த அரசியல் அதிகாரியாக ஹிலாரி கிளின்ரன் உள்ளார்.

மியான்மாரில் கடந்த ஆறு மாதங்களாக அரசியற் சுதந்திரம், நேர்மைத் தன்மை என்பன அதிகம் இடம்பெற்றதன் விளைவாகவே அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் இங்கு பயணம் செய்திருந்தார்.

சீனாவானது அமெரிக்கா உள்ளடங்கலான ஏனைய உலக நாடுகளுடன் தொடர்பைப் பேணுவதில் அதிகளவில் நம்பிக்கையுடன் உள்ள போதிலும் கூட, அதன் சில முரண்பட்ட போக்கானது ஏனைய நாடுகளை ஓரங்கட்டச் செய்துள்ளது.

எடுத்துக் காட்டாக 2009-ல் இடம் பெற்ற கொப்பன் கேகன் உச்சி மாநாட்டில், சீனாவானது காலநிலை மாற்றம் தொடர்பான சமரசத்தில் மேற்கொண்ட முரண்பட்ட நிலையானது ஐரோப்பிய நாடுகளையும் பிரேசில் உட்பட்ட ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளையும் எரிச்சலடையச் செய்வதில் வெற்றி கண்டது.

சீனாவானது 2010-ல் இடம் பெற்ற **சியானன்** சம்பவத்தை தவறுதலாகக் கையாண்டது. (கப்பல் ஒன்றை மூழ்கடித்ததில் உண்மையில் வடகொரியா பொறுப்பாக இருந்த போதும் தென்கொரியா மீதே பழிசுமத்தப்பட்டது. இந்த விடயத்தில் உண்மையைக் கண்டறிவதில் சீனா தவறிழைத்தது)

இவ்விடயமானது தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய இரு நாடுகளையும் எரிச்சலடைய வைத்தது. இதன் பின்னர் இவ்விரு நாடுகளும் இணைந்து கடற்பாதுகாப்பு நடவடிக்கைகளை அமெரிக்காவுடன் மேற்கொண்டன.

(தொடரும்)

# தியானம்

## ஆனந்தத்தின் வாசல்



ஆன்மீகம் 14

எனவே தனது சக்திகளின் மீது போதுமான ஆளுமை இல்லையென்றால் பொதுவாக தன்னிலை சார்ந்த பரிமாணம் இல்லை என்றே கருதப்படுகிறது. நீங்கள் வெறுமனே உடல்ரீதியான நல்வாழ்வை மட்டும் தேடிக் கொண்டிருந்தால் அதற்கு எளிமையான சில ஆசனங்கள் நிச்சயமாக உதவும். அதனால் பலன்



இருக்காது என்று சொல்லவில்லை. பலன் இருக்கும். ஆனால், யோகப் பயிற்சிகள் மருத்துவ நிவாரணத்திற்காக உருவாக்கப்படவில்லை. யோகப்பயிற்சிகள் உங்கள் வாழ்க்கையின் அடிப்படைத் தன்மையிலும், நீங்கள் யார் என்பதன் அடிப்படையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர உங்கள் சக்திநிலைகளில் மாற்றத்தை ஏற்படுத்தவே உருவாக்கப்பட்டன. எனவே உங்கள் வாழ்வின் ஒரு அம்சம் மாற்றமடைந்தால் உடனடியாக அடுத்த அம்சத்தை உங்களுக்கு வழங்குவதற்கு யாரேனும் அங்கே தயாராக இருப்பர். உங்களுக்கு இதன் அடிப்படையை கற்றுத் தருபவர்கூட அடுத்த அம்சம் என்ன என்பதைப்பற்றி தெரியாமல் இருக்கலாம். அதுவும்கூட ஒரு பிரச்சினையாக முடியும். அதுவும்கூட ஒரு பிரச்சினையாக மாற முடியும்.

அப்படியானால், யோகப்பயிற்சி யாருமே செய்யக்கூடாது. என்று நாம் சொல்லலாமா? ஏனென்றால், இது மிகவும் ஆபத்தானதே. யோகா ஆபத்தானதல்ல. நீங்கள் அதை முட்டாள்த்தனமாகக் கையாண்டால், அது ஆபத்தானது.நீங்கள் எதை முட்டாள் தனமாகக் கையாண்டாலும் அது ஆபத்தானதுதான். நீங்கள் ஒரு வண்டியை முட்டாள்தனமாக ஓட்டிக் கொண்டிருந்தாலும். அது ஆபத்தை விளைவிக்கும். அதேபோல உள்நிலைப் பரிமாணத்திற்கு, முற்றிலும் மாறுபட்ட பரிமாணத்திற்கு உங்களை எடுத்துச் செல்லும் யோகா என்ற இந்த வாகனத்தை தவறாக உபயோகப்படுத்தினாலும் அது உங்களுக்கு தீங்கினை ஏற்படுத்ததும். உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் சமனற்ற நிலையை ஏற்படுத்தும்.

எனவே, ஒருவர் தன்னிலை சார்ந்த பரிமாணத்தை கற்றுக்கொள்ள விரும்பினால், இந்தக் குறிப்பிட்ட காலத்திற்காவது மிகவும் உறுதியான ஒரு சூழலில் இருந்து அதைக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. உறுதியற்ற ஒரு சூழலில் நீங்கள் யோகாவைக் கற்றுத்தரவும் முடியாது; கற்றுக் கொள்ளவும் முடியாது.

**கேள்வி:** ஈஷா யோகா என்பது பதஞ்சலி முனிவரின் யோக சூத்திராவையும், கௌதம புத்தரின் சூன்யா என்ற த்ன்மையையும் கலந்த ஒரு அம்சமா?

**சத்குரு:** கலவையென்றாலே அதில் எப்படியும் இரண்டு அம்சங்களாவது இருக்கும். அப்படியிருந்தால்தான் நீங்கள் அவற்றைக் கலந்து தரமுடியும். ஈஷா யோகா என்பது இரண்டு அம்சங்களின் கலவையல்ல. கௌதமர் என்ன சொன்னாரோ அதுவும் முழுமையானது. பதஞ்சலி என்ன சொன்னாரோ அவரைப் பொறுத்தவரை அதுவும் முழுமையானது. நீங்கள் பதஞ்சலி என்ன சொல்லியிருக்கிறாரோ அதில் எதையும் புதிதாக சேர்க்கவும் முடியாது, அதிலிருந்து எதையும் எடுத்து விடவும் முடியாது. நிச்சயமாக யாராலும் அதைச் செய்ய முடியாது. அப்படியானால், நாம் செய்வது என்ன? இந்த இரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு கலவையா? அப்படியில்லை. பதஞ்சலி முனிவரோடும் கௌதம புத்திரரோடும் இதற்கு சம்பந்தம் இல்லை. இது தற்போது நமக்குள் இருக்கும் உயிர்த் தன்மையோடு சம்பந்தப்பட்டது. அப்போதும் இதேவிடயம் அவர்களுக்குள்ளும் இயங்கிக் கொண்டு இருந்தது. அதனால், அதே விடயத்தைப் பற்றி அவர்கள் பேசியிருக்கிறார்கள். இப்போதும் அதே உயிர்த் தன்மை இருக்கிறது. எனவே நாம்பேசுவது அவர்கள் பேசிய அதே விடயத்தை திரும்பவும் பேசுவது போல் தோன்றுகிறது. எனவே இது ஒரு கலவையல்ல. அவர்கள் அவர்களுக்குள் எது முழுமையோ அதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். நான் எனக்குள் எது முழுமையோ அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன். எனவே நிச்சயமாக இதில் முரண்பாடுகள் இருக்க முடியாது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

---

# ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து முஸ்லிம் புலவர்கள் உயர்த்திய தமிழ்

04

அரேபியத் தீபகற்பத்தின் தாய் மொழியான அரபு மூலமாக செம்மொழி தமிழ், இங்கே தமிழ் பேசிய முஸ்லிம்களிடம் கோலோச்சியது.

இது கேரள-மலையாள மக்களுக்கும் மிகப்பொருந்தும். அங்கும் மலையாள மொழி அரபு எழுத்துக்களில் அறிமுகமானது. இலக்கியங்கள் பிறந்தன. பிரபல கல்விமான், எழுத்தாளர், ஆய்வாளர், யாழ்-மண்ணின் மைந்தர் காலஞ்சென்ற ஏ.எம்.ஏ அஸீஸ் அவர்கள் இன்று இருப்பார்களேயானால் இதுபற்றிப் பெரியதொரு ஆய்வையே இந்த அரங்கில் அளித்திருப்பார்கள்.

மேலும் பேராசிரியர் செல்வநாயகம் எடுத்துக் காட்டியதுபோல், இவ்வாறு உருவான அரபுத்தமிழ் இலக்கியங்களில் பிற சமயக்காப்பையோ மதம் மாற்றம் செய்யும் சமயப் பிரசாரத்தையோ காண இயலாது.

இறைவேதமாகிய அல்-குர் ஆனில் அரபில் ஒரு வசனம் உள்ளது. லக்கும் தீனுக்கும் வலியத்தீன் அதாவது அவரவர் மார்க்கம் அவரவர்களுக்கே!

இந்த உயரிய தத்துவத்தை மனத்திலிருந்து தமிழை உயர்த்த வந்த முஸ்லிம் புலவர்கள் மிகவும் அவதானத்துடன் அல்-கலம் கொண்டு, அதாவது இறகுப் பேனா, எழுத்தாணி ஆகியவற்றால், தமிழ் இஸ்லாமிய இலக்கியங்களை உழுது பயிரிட்டனர். அறுவடை செய்தனர். அத்தனையும் அறுசுவை, அற்புதம்!

அதே காலகட்டத்தில் தமிழகத்தில் தலையெடுத்துக் கரகாட்டம் ஆடிக் கொண்டிருந்த சமணர்கள், சீவக, சிந்தாமணி, வளையாபதி, பெருங்கதை என்னும் மூன்று காப்பியங்களையும் சூளாமணி, நீலகேசி, யசோதர காவியம், நாககுமார காவியம், உதயண குமார காவியம் என்னும் ஐஞ்சிறு காப்பியங்களையும் மட்டுமே பாடியுள்ளனர். எல்லாம் சேர்ந்து எட்டுக்காப்பியங்களே சமணர்கள் தமிழுக்குத் தந்தவையாகும். ஆனால், முஸ்லிம்கள் படைத்துள்ள பெரும் காப்பியங்களோ பதினெட்டு! சிறு

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

காப்பியங்களோ ஒன்பது!

ஆக, 18 பெரும்காப்பியங்களும், 9 சிறு காப்பியங்களும் சேர்த்து முஸ்லிம்கள் வழங்கிய காப்பியங்களின் எண்ணிக்கை 27 ஆகும். இவற்றில் காப்பிய இலக்கணங்கள் முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளன. அதுவும் பதினைந்து குறுகிய ஆண்டுகளில் ஒன்பது காப்பியங்கள் படைத்திட்ட வேகம் அவர்கள் தமிழின் பெயரால் கேட்டு வந்த அருட்கொடை! அதிகமான அளவில் காப்பியங்கள் இயற்றி அருந்தமிழுக்கு உயர்வுசேர்த்த சிறப்பும் அவர்களுக்கே!

அந்த வகையில் சற்று முன் குறித்தது போல் 12 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பல்சந்த மாலை, 15ஆம் நூற்றாண்டில் யாக்கூபு சித்தர் பாடல்கள், 16 ஆம்நூற்றாண்டின் ஆயிரமசாலாப் புராணம், மிகுராஜ் மாலை(1590), 17ஆம் நூற்றாண்டின் திருநெறிக் கீதம் (1648), சக்கூன் படைப்போர் (1686), கனகாபிசேஷக மாலை, முதுமொழி மாலை, சீறாப்புராணம் முதலியன தமிழுக்கு இஸ்லாமியக் காப்பியங்களாக கிடைத்துள்ளன.

அவ்வாறு படைத்தவற்றுள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தூய தமிழ்ச் சொற்களை முஸ்லிம்கள் எடுத்தாண்டுள்ளனர்.

அதே நேரத்தில், அரபு, பாரசீக, உருது சொற்களையும் தமிழுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இதன் தாக்கத்தை அருணகிரிநாதரிடமும், குமரகுருபரரிடமும் கூடக் காணக் கூடியதாகவுள்ளது!

விஞ்சையர் மாதர் சபாஷ் என்கிறார் அருணகிரியார். குறவர் மகட்குச் சலாம் இடற்கு ஏக்கறு குமரனை என்பது குமரகுருபரரின் வணக்கம். இந்த இடத்தில் இன, மத பேதம் கடந்த ஒரு சிறப்பு நிலையை நாம் காண்கிறோம். மொழிப் பற்றின் முன் மதப்பாகுபாடுகளைக் கடந்து நின்ற பான்மைக்கு உதாரண புருஷர்களாக உமறுப் புலவரிலிருந்து சவ்வாதுப் புலவர், பிச்சை இபுறாஹிம் புலவர், மஸ்தான் சாகிபு, ஈறாக சதாவதானி, சேகுதம்பிப் பாவலர் வரை நூற்றுக் கணக்கானோரைக் காணலாம். ஓரிரு எடுத்துக்காட்டுக்கள் இங்கே:

எட்டயபுர சமஸ்தானத்தின் அதிபதி ஒரு இந்துப் பெருமகன் அவரது ஆஸ்தானக் கவிஞரான கடிகை முத்துப் புலவர் ஓர் இந்து. அவரிடம் கற்ற பல சைவ சிஷ்யர்கள் மத்தியில் ஒரே ஒரு முஸ்லிம் உமறுப்புலவர்! பிற்காலத்தில் அந்த ஒரே முஸ்லிமுக்கே ஆஸ்தானக் கவிஞர் பதவி.

அவர்கள் அவரை மதக்கண் கொண்டு பார்க்கவில்லை. மொழிக் கண்கொண்டும் தமிழ்க் கண் கொண்டும் பார்த்தார்கள்.

(முற்றும்)

மானா மக்கீன்

# ஆணைக்குழுவின் அறிக்கையில் முரண்பாடுகள் பல காணப்படுகின்றன

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து விசாரணைகள் நடத்த வதற்கு ஆணைக்குழுவுக்கு ஆணை வழங்கப் படவில்லை. எனினும் இதுதொடர்பாக எந்த விசாரணைகளையும் நடத்தாமல் ஆணைக் குழு இந்த முடிவுக்கு எவ்வாறு வந்தது என் றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை முரண்பாடுகள் பலவற்றைக் கொண்டிருப்ப தாக இவ்வறிக்கை தொடர்பாக தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பு ஆராய்ந்து வருவதாகவும் இதுபற்றி அதிகாரபூர்வமான கருத்து விரை வில் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத் தினர் பொதுமக்களை இலக்கு வைத்து வேண்டுமென்றே தாக்குதல் நடத்தவில்லை என்று அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது முரண்பாடானதாக உள்ளது என நாடாளு மன்ற உறுப்பினர் சுமந்திரன் சுட்டிக்காட்டி யுள்ளார்.

அதேவேளை அரசாங்கம் 70 ஆயிரம் பேர் மட்டுமே போர் வலயத்தில் இருந்ததாக முன்னர் கூறிவந்தது.

ஆனால் தற்போது போர் வலயத்தில் 4 இலட்சத்திற்கும் அதிகமான பொதுமக்கள் அங்கு இருந்ததாக அதிகாரபூர்வமாக அறி விக்கப்பட்டுள்ளது.

இது பற்றியும் இழப்புக்கள் குறித்தும் அறிக்கையில் எதுவும் கூறப்படவில்லை என வும் சுமந்திரன் தெரிவித்துள்ளார். (அ-2)

## ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் சடலமாக மீட்பு

தபுரம், எப்பாவெல கட்டியாவெல பகுதி யில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச் சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

மூன்று பெண்களும் ஆணொருவருமே உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம்இரவு இடம்பெற்றுள்ளது.

இது கொலையா, தற்கொலையா என்பது பற்றி இதுவரை தகவல் வெளியாகவில்லை. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை எப்பாவெல பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (அ-2)

# இந்தியாவின் கைத்தொழில் நிறுவனங்களால் இலங்கை மலைப்பிரதேசங்களுக்கு ஆபத்து

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

இந்தியாவின் பல்வேறு கைத்தொழில் நிறுவனங்களிலிருந்தும் வெளியாகும் விஷ வாயுக்களினால் இலங்கையின் மலைப் பிரதேசங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தினால் நடத்தப் பட்ட ஆய்வின் மூலம் தகவல் வெளியிடப் பட்டுள்ளது.

ஹற்றன் சமவெளி உள்ளிட்ட நாட்டின் மலைப்பிரதேசங்கள் மாசடைவதற்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ளதாகவும் சுற்றாட லுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைக் கருத்திற் கொண்டு உடனடியாக இராஜதந்திர ரீதியி லான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் வாயு மண்டலம் விஷ வாயுக்களினால் நிரம்பியுள்ளதாக சப்ரகமுவ பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் குறிப் பிட்டுள்ளார்.

இந்த நிலைமை மக்களின் இயல்பு வாழ்க் கைக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பாண் தயாரிப்பின்போது அரிசிமா கட்டாயம் சேர்க்கப்படல் வேண்டும்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பாண் தயாரிப்பதற்காக பத்து வீதம் அரிசி மாவை சேர்ப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது; அரிசிமாவில் தவிடு நீக்கப்பட்டுள்ளதன் காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப் பிடுகின்றது.

கோதுமைமாவை உணவாக உட்கொள் ளும் பெரும்பாலானவர்கள் நீரிழிவு உள் ளிட்ட தொற்றுநோய் அல்லாத ஏனைய நோய் களால் பீடிக்கப்படும் அபாயம் நிலவுவதாக அமைச்சு குறிப்பிடுகின்றது.

அரிசிமாவை கோதுமைமாவுடன் சேர்ப் பது கட்டாயமாக்கப்பட்ட சுற்றறிக்கையை விநியோகித்துள்ளதாகவும் சுகாதார அமை ச்சு தெரிவிக்கின்றது.

பாண் உற்பத்திக்கான மாற்று மூலப் பொருட்களில் ஒன்றாக அரிசிமாவுக்கு வர்த்த மானியில் அர்த்தம் கற்பிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சீனி, பால் உற்பத்தி, சோளமா, அரிசிமா,குரக்கன் மற்றும் சோயாமா வகைகள், தானிய வகைகள் என்பன மாற்று மூலப் பொருட்களாக உள்ளடக்கப்பட் டுள்ளன. (அ-2)

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்து ஆலோசனை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை களை அமுல்படுத்துவது குறித்துஅரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இதன்படி அனைத்து கட்சிகளும் கூட்டாக இணைந்து அப்பாவி பொதுமக்களிடம் மன்னிப்பு கோரும் அறிக்கை ஒன்றை வெளி யிட அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

சனல் 4 ஊடகத்தின் காணொளி தொடர் பில் விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென ஆணைக்குழு கோரியுள்ளது.

இது தொடர்பில் விரிவான விசாரணை களை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை பகிரங்கப்படுத்தும் வரையில் ஐக்கிய நாடு களின் மனித உரிமைக்குழுவின் ஆணை யாளர் நவநீதம்பிள்ளை இலங்கை விஜயம் செய்வதில்லை என அறிவித்துள்ளதாகவும் தற்போது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள தால் இலங்கை விஜயம் செய்வதற்கான தடை நீக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

அனைத்து கட்சிகளும் கூட்டாக இணை ந்து அப்பாவி பொதுமக்களிடம் மன்னிப்பு கோரும் அறிக்கை ஒன்றை வெளியிடவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப் பதற்கு எதிர்க்கட்சிகள் ஆர்வம் காட்டினால் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்து அனைத்து கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் எதிர்க்கட்சிகளுடன் மட்டுமன்றி ஆளும்கட்சியில் கூட்டணி வகிக்கும் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித் துள்ளது. (அ-2)

# பகவத்கீதையை தடைசெய்தது ரஷ்ய அரசாங்கம்

இலக்கியத்தில் தீவிரவாதத்தை போதிக் கிறது என்று கூறி ரஷ்ய அரசு இந்துக்களின் புனித நூல் என்று சொல்லப்படும் பகவத் கீதையை தடைசெய்துள்ளது.சைபீரிய நீதி மன்றத்தில் இது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கொன்றில் கிடைத்த தீர்ப்பின் அடிப் படையில் இந்ததடை விதிக்கப்பட்டுவதாக அறிவித்துள்ளது ரஷ்ய அரசாங்கம்.

இந்தியா, ரஷ்யா இடையே பல்வேறு ஒப்பந்தங்களைச் செய்யும் விதமான அரசு முறை பயணமாக இந்திய பிரதமர் மன் மோகன்சிங் ரஷ்யா சென்றுள்ள நிலையில் பகவத் கீதை தடை செய்யப்பட்டுள்ளது பர பரப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ)







சிறுவர், பெண்கள் விவகார அமைச்சும் கல்வி அமைச்சின் முன்பள்ளி பிரிவும் இணைந்து நடத்திய முன்பள்ளி சிறார்களுக்கான பற்சிகிச்சை முகாம் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது வடமாகாண முன்பள்ளி பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா மங்கள விளக்கேற்றுவதையும் பற்சிகிச்சை வைத்தியர் திருமதி கௌரி பராபரன் முன்பள்ளி சிறுவனின் பற்களை பரிசோதிப்பதையும் பற்சிகிச்சை முகாமில் கலந்து கொண்ட சிறார்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## அவுஸ்திரேலியா நோக்கிச் சென்ற படகு கடலில் மூழ்கியதில் பலர் பலி

### இலங்கையர்களும் இருக்கலாம் என அச்சம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியா நோக்கிச் சென்ற படகு ஒன்று 380 அகதிகளுடன் இந்தோனேசியக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் கவிழ்ந்ததில் 300 இற்கும் அதிகமானோர் காணா மற்போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ஜாவா கடற்பகுதியில் கவிழ்ந்த இந்தக் கப்பலில் பயணம் செய்த 76 அகதிகளை மீட்டுள்ளதாக ஜாவா அவசரகால மீட்புப் பணியகத்தின் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்தும் அண்மையில் அகதிகள் அவுஸ்திரேலியா நோக்கிச் சென்றுள்ள நிலையில் இந்தப் படகில் இலங்கையைச் சேர்ந்தவர்களும் பயணம் மேற்கொண்டனரா என்பது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மரத்தினாலான இந்தப் படகில் அளவுக்கதிகமானோர் பயணம் செய்துள்ளதாகவும் பெரிய அலைகளால் தாக்கப்பட்டு அது கவிழ்ந்திருக்கலாம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தப் படகில் பல்வேறு நாட்டவர்கள் பயணம் செய்ததாகவும் அவர்களில் பெரும்பாலானோர் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கரையில் இருந்து 90 கி.மீ. தொலைவில் மூழ்கிய இந்தப் படகில் 40 சிறுவர்கள் வரை பயணம் செய்ததாக மீட்கப்பட்ட அகதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் படகில் பயணம் செய்த 200 இற்கும் அதிகமானோர் மரணமாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. (அ-2)

## இலங்கையில் 70 பேருக்கு சர்வதேச பொலிஸார் பிடிவிறாந்து பிறப்பிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக செயற்பட்ட 70 பேருக்கு சர்வதேச பொலிஸார் பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்துள்ளனர் என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களில் 29 பேர் பாரிய பயங்கரவாத சம்பவங்களுடன் தொடர்புடைய தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பல கோடி பூபா'வெட் வரி மோசடியில் ஈடுபட்ட கயிப் குதுப்தீனின் பெயரும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு அரச சார்பற்ற நிறுவனமொன்றின் உப தலைவராக கடமையாற்றிய வேலுப்பிள்ளை ரேமன் என்பவருக்கு எதிராகவும் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகத்தில் ஈடுபட்ட ஐந்து பெண்கள் இணையத் தளமொன்றை நடத்திய நபர் ஒருவர் ஆகியோரது பெயர்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முதல் தடவையாக பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஒருவரின் பெயரையும் இதில் உள்ளடக்கியுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

## 30 ஆயிரம் சிறுவர்களுக்கு நரம்புசார் பிரச்சினைகள்

### சுகாதார பிரிவு தகவல்

பல்வேறு காரணங்களால் நாட்டிலுள்ள சுமார் 30 ஆயிரம் சிறுவர்கள் நரம்பு சார்ந்த பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவு குறிப்பிடுகின்றது.

அவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு புதிய முறைமையொன்றை நாட்டில் முதற்தடவையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கொழும்பு சீமாட்டி ரிச்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ரத்னசிறி ஹேவகே தெரிவித்தார்.

இதற்கமைய நரம்புசார் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக விசேடமாக நிர்மாணிக்கப்பட்ட வெளியக மைதானமொன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

வெளிநாட்டு அமைப்பொன்றின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படும் இந்த விசேட விளையாட்டு மைதானத்திற்காக 20 இலட்சம் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அவ்வாறான பிரச்சினைகளில் இருந்து சிறுவர்களை பாதுகாக்க முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

## வாகன இலக்கத்தகடுகள் மீள் விநியோகம் இல்லை

### போக்குவரத்து திணைக்களம்

வாகனங்களுக்கு பதிவு செய்யப்பட்ட இலக்கத்தகடுகளை இது வரை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அவற்றை மீள விநியோகம் செய்யாமல் இருப்பதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டிலிருந்து 2010ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கட்டணம் செலுத்தி பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கத்தகடுகளும் மீள விநியோகிக்கப்படமாட்டாது என மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் லலித் தர்மப்பிரிய தெரிவிக்கிறார்.

கட்டணம் செலுத்தி பதிவு செய்யப்பட்ட பெரும்பாலான இலக்கத்தகடுகள் பிரதேச செயலகங்களிலும் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்திலும் தேங்கி கிடப்பதாக அவர் கூறினார்.

இத்தகைய இலக்கத்தகடுகளுக்கு பதிலாக அடுத்த வருடம் முதல் கட்டணம் செலுத்தி புதிய இலக்கத்தகடுகளை பெற்றுக்கொள்ள முடியுமென அவர் தெரிவிக்கிறார். (அ-2)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.12 19

★ 324-லிசீனியஸ் ரோமப் பேரரசன் பதவியைத் துறந்தான்.

★ 1154-இங்கிலாந்தின் இரண்டாம் ஹென்றி முடிசூடினான்.

★ 1606-ஐக்கிய அமெரிக்காவின் 13 குடியேற்ற நாடுகளில் முதலாவதான வேர்ஜீனியாவின் ஜேம்ஸ்டவுன் நகரில் இங்கிலாந்தில் இருந்து மூன்று கப்பல்களில் ஆங்கிலேயர்கள் வந்திறங்கினர்.

★ 1871-யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக கத்தோலிக்க மத குருப் பதவிகள் (Ordination) வழங்கப்பட்டன.

★ 1877-யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவில் வாந்திபேதி மற்றும் சின்னம்மை நோய் பரவியதில் பலர் இறந்தனர்.

★ 1907-பென்சில்வேனியாவில் நிலக்கரிச் சுரங்கத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 239 பேர் உயிரிழந்தனர்.

★ 1916-முதலாம் உலகப் போர்: பிரான்சில் வேர்டன் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் ஜேர்மனியப் படைகளை பிரெஞ்சுப் படைகள் தோற்கடித்தன.

★ 1941-அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனிய இராணுவத் தலைவர் ஆனார்.

★ 1961-போர்த்துக்கீச குடியேற்ற நாடான டாமன் டையூ பகுதியை இந்தியா தன்னுடன் இணைத்துக் கொண்டது.

★ 1963-சன்சிபார் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்று சுல்தான் ஹமூட் பின் முகமது தலைமையில் முடியாட்சியைப் பெற்றது.

★ 1967-இரு நாட்களின் முன்னர் கடலில் நீந்தும் போது காணாமல்போன அவுஸ்திரேலியப் பிரதமர் ஹரல்ட் ஹோல்ட் இறந்துவிட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

★ 1972-சந்திரனுக்கு கடைசித் தடவையாக மனிதரை ஏற்றிச் சென்ற அப்பல்லோ 17 பாதுகாப்பாக பூமி திரும்பியது.

★ 1983-உலகக்கோப்பை காற்பந்துப் போட்டியில் வழங்கப்படும் பரிசுக்கிண்ணம் பிரேசிலில் அந்நாட்டு காற்பந்தாட்ட அமைப்பின் தலைமையகத்தில் வைத்துத் திருடப்பட்டது.

★ 1984-ஹொங்கொங்கின் ஆட்சியை ஜூலை 1, 1997 இல் மக்கள் சீனக் குடியரசிடம் மீண்டும் ஒப்படைக்கும் ஒப்பந்தம் சீன ஜனாதிபதி டெங்க்ஸியாவோபிங், பிரித்தானியப் பிரதமர் மார்க்ரெட் தாட்சர் ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டது.

★ 1986-சோவியத் எதிர்ப்பாளி அந்திரேய் சாகரொவ் வீட்டுக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

★ 1997-இந்தோனேசியாவில் விமானம் ஒன்று விழ்ந்து நொருங்கியதில் 104 பேர் உயிரிழந்தனர்.

★ 1997-டைட்டானிக் திரைப்படம் வெளியானது.

### பிறப்புக்கள்

★ 1901-ருடால்ப் ஹெல், ஜேர்மனிய கண்டுபிடிப்பாளர் (இ.2002)

★ 1906-லியோனிட் பிரெஷ்னேவ், சோவியத் ஒன்றியத் ஜனாதிபதி (இ.1982)

★ 1974-ரிக்கி பொன்டிங், அவுஸ்திரேலியத் துடுப்பாட்டக்காரர்

### சிறப்பு நாள்

★ கோவா- சுதந்திர தினம்



★ 1934- இந்தியாவின் 12 ஆவது குடியரசுத் தலைவரான பிரதிபா பட்டேலின் பிறந்த தினம்.

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 17.12.2011-14.01.2012




**அஸ்வினி, பரணி, கார்த்திகை, 1-ஆம் பாதம்**

**எதிலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையை எப்போதும் வளர்த்துக் கொள்ளும் மேஷ இராசி நேயர்களே!**

உங்களுக்கு எப்போதும் செயல் திறன் அதிகமாக இருக்கும். சில சமயங்களில் குறுக்கு வழிகளையும் கண்டுபிடித்து அதன் மூலமாகவும் வெற்றிப் பாதையை நோக்கி நடைபோடுவீர்கள். இன்றைக்கு விதை விதைத்தால், அதை நாளைக்கே அறுவடை செய்து பார்க்க வேண்டும் என்ற துடிப்பும் வேகமும் உங்களிடம் பதிந்து இருக்கும். பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் நீங்கள் வளர்த்துக் கொண்டால், பெருமைக்குரிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இயலும்.

உங்களுக்கு இந்த மார்கழி மாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது குரு மங்கல யோகமும் சந்திர மங்கல யோகமும் செயல்படும் விதத்தில் கிரக நிலைகள் உலா வருகின்றன. எனவே, குடும்பத்தில் சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும். சொல்லை செயலாக்கிக் காட்டும் வல்லமை கூடும். சென்ற மாதத்தில் ஏற்பட்ட தடைகளும், தாமதங்களும் அகலும்.

விரயாதிபதி வக்ரநிவர்த்தி ஆனதால், இனி விரயங்கள் கூடலாம் என்றாலும், வீண் விரயங்கள் ஏற்படாமல் இருக்க குடும்பத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவது நல்லது. மின்சாரப் பொருட்கள், மற்றும் தங்கம், வெள்ளி ஆபரணங்கள் வாங்க உகந்த நேரமிது. குரு வழிபாட்டை முறையாக மேற்கொண்டால், கொடுக்கல், வாங்கல்களில் ஏமாற்றங்களை சந்திக்காமல் இருக்கலாம்.

தனாதிபதி சுக்கிரன் டிசம்பர் 17 ஆம் திகதி 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்க போகிறார். எனவே தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொகை எதிர்பாராத இடத்திலிருந்து வந்து சேரும். பெண் வழி ஒத்துழைப்பு உண்டு. வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டே இருக்கும்.

டிசம்பர் 21 ஆம் திகதி துலாம் இராசியில் சனி உச்சம் பெற்று சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை கண்டகச்சனி என்று சொல்வார்கள் எனவே யோசித்து முடிவெடுத்தால், யோகங்களை எதிர்கொள்ளலாம். சனிக்குரிய கவசத்தை அதன் சந்நிதியில் வாசித்தால் வளர்ச்சி காணலாம். அதன் பார்வை பலம் 1,4,9,ஆகிய இடங்களில் பதிவதால் சொத்துக்கள் வாங்கும் பொழுது யோசித்து வாங்குவதும் சொந்த பந்தங்களை அனுசரித்தும் செல்வது நல்லது. ஆரோக்கியக் குறைபாடுகள் ஏற்பட்டால், உடனுக்குடன் நிவர்த்தி செய்து கொள்வதே உத்தமமாகும்.

ஜனவரி 1 ஆம் திகதி 3,6 இற்கு அதிபதியான புதன் ஒன்பதில் சஞ்சரிக்கப் போகிறார் எனவே சகோதரர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள். சொத்துத் தகராறுகள் குறித்த பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

ஜனவரி 10 ஆம் திகதி கும்ப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். 2,7 இற்கு அதிபதி இலாபஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போவதால் வாழ்க்கைத்துணை வழியே வரவு வந்து சேரும். கூடுதல் வருமானம் கிடைக்கும். இந்த நேரத்தில் வீடுகட்டும் முயற்சி அல்லது கட்டிய வீட்டை பராமரிக்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

இம்மாதம் முருகப்பெருமானை செவ்வாய்க்கிழமை தோறும் வழிபட்டு வாருங்கள் முன்னேற்றங்கள் வந்து சேரும். இம்மாதம் குடும்பச் செலவு கூடுகின்றதே என்று கவலைப்படுவீர்கள். அஷ்டமத்து இராகு இனம்புரியாத கவலையை உருவாக்கும். அடிக்கடி கனவுகள் வரும். அதை நினைத்து குழப்பங்களும் ஏற்படலாம். சனிப் பெயர்ச்சிக்குப் பிறகு குடும்பச் சுமை கூடும். கணவன்- மனைவி உறவு பலப்பட ஒருவருக்கு ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சலுகைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும் என்றாலும், நிம்மதி இருக்காது. குருவழிபாட்டிலும், குலதெய்வ வழிபாட்டிலும் ஆர்வம் காட்டுங்கள். மாதக் கடைசியில் அஞ்சல் வழித் தகவல் ஆச்சரியப்பட வைக்கும்.

சிவல்புரி சிங்காரம்

**கார்த்திகை 2, 3, 4 பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 பாதங்கள்**

**எல்லோரிடமும் சகஜமாகப் பேசும் ரிஷப இராசி நேயர்களே!**

எந்த வேலை செய்தாலும் அதை ஊன்றிக் கவனித்துச் செய்வீர்கள். வேலை செய்யும்போது உங்கள் கவனத்தை திசை திருப்ப முடியாது. முதலாளியாகவே நீங்கள் இருந்தாலும், தொழிலாளர்களோடு இணைந்து செயற்படுவீர்கள். அனுபவத்தில் பெற்றதை அடுத்தவர்ளுக்கு எடுத்துரைப்பதிலும். நீங்கள் தான் வல்லவர்கள்.

உங்களுக்கு இந்த மார்கழி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, ஆதரவுக்கரம் நீட்டுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றே சொல்ல வேண்டும். அடுத்தவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். சுகஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதாலும்,குரு அதைப் பார்ப்பதாலும், வாழ்க்கைத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். வள்ளல்களின் ஒத்துழைப்போடு நல்ல வாய்ப்புக்களெல்லாம் இல்லம் தேடிவரும்.

அஷ்டமாதிபதி குருவக்ர நிவர்த்தியாகி பன்னிரண்டில் சஞ்சரிப்பது யோகம்தான். விபரீத ராஜயோக அடிப்படையில், சில நற்பலன்கள் உங்களுக்குக் கிடைக்கப் போகிறது. குறிப்பாக, குழந்தைகள் வழியில் ஏற்பட்ட சிரமங்கள் தானாகவே விலகும்.

குடியிருக்கும் வீட்டாருடன் ஏற்பட்ட மோதல் அகலும். புதன்-இராகு ஆகிய கிரகங்கள் 7-ல் சஞ்சரிப்பதால் மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்பு எதிர்பார்த்தபடி அமையுமா என்பது சந்தேகம் தான். இருப்பினும் சற்பசாந்தியை முறையாகச் செய்தால்தான் அற்புத பலன்களை முறையாகப் பெறமுடியும்.

உங்கள் இராசி நாதன் சுக்கிரன் டிசம்பர் 17ஆம் திகதி முதல் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக தந்தைவழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். உத்தியோகத்தில் தடையாக இருந்த ஊதிய உயர்வு இப்போது கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். உற்சாகத்தடன் செயற்படுவீர்கள். பெண் குழந்தைகள் வழியே சுபச் செய்திகள் வந்து சேரும். பிரிய மானவர்களுடன் இணைந்து தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

டிசம்பர் 21ஆம் திகதி துலாம் இராசியில் சனி உச்சம் பெற்று சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக மிகுந்த நற்பலன்கள் வந்து சேரப்போகிறது. உங்கள் இராசிக்கு யோகம் தரும் கிரகமான சனி உச்சம் பெறும்போது, நீங்கள் நினைத்தது எல்லாம் நடைபெறப் போகிறது. நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். குரு பார்வை சனியின் மீது பதிவதால், இதுவரை இருந்த குழப்பங்கள் அகலும். கொடுக்கல், வாங்கல் ஒழுங்காகும்.

ஜனவரி 1ஆம் திகதி அஷ்டம ஸ்தானத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். மறைந்த புதன் நிறைந்த தன இலாபத்தைக் கொடுக்கும் என்பதால், பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். ஆக்கபூர்வமாகச் சிந்தித்தும் செயற்படுவீர்கள். ஆதரவு அளித்த உறவினர்களில் ஒரு சிலர் விலகிச் சென்று விட்டனரே என்ற கவலை அகலும். புதிய உறவினர்கள் வந்திணைந்து, பொன்னான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுப்பார்கள்.





இராசிநாதன் சுக்கிரன் ஜனவரி 10 ஆம் திகதி கும்பராசியில், செயல் ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். பயணங்கள் அதிகரிக்கும். பம்பரமாகச் சுழன்று பணிபுரிவீர்கள். அரசியலில் காலடி பதித்தவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கலாம். இடம், பூமி வாங்குவதில் ஆர்வம் அதிகரிக்கும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பார்கள். இம்மாதம் நந்தீஸ்வரனை வழிபட்டு நலம் காணுங்கள்.

இம்மாதம் விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரப்போகிறார்கள். வளைகாப்பு விழாக்களும், வரன்கள் தேடிவரும் வாய்ப்பும் உருவாகும். சனி பெயர்ச்சிக்குப் பிறகு பொருளாதார நிலை உயரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேல் அதிகாரிகளின் சலுகைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். வாகனம் வாங்க, வீடுகட்ட, விண்ணப்பித்தபடிவத்துக்கு நல்ல தகவல்கள் வந்து சேரும். இராகு-கேது ரீதியிலும் கிரிவல வழிபாடும், நாளும் பொழுதும் நன்மையை வரவழைத்துக் கொடுக்கும்.

(தொடரும்)

# சிறப்பாக செயற்பட்ட நிறுவனங்களுக்கு
# பிஸ்னஸ் ருடே ரொப் - 20 கௌரவம்



பிரதமரிடம் இருந்து விருது பெறும் புக்கிட் தாரா நிறுவனத்தின் தலைவர் ஹரி செல்வநாதன்

(கொழும்பு)

இலங்கையின் அதிசிறந்த பிரஜைகள் கம்பனிகளை பாராட்டும் பிஸ்னஸ் ருடே ரொப் ருவன்ரி **(Business Today TOP 20)** விருது வழங்கும் நிகழ்வானது பிரதமர் டி.எம்.ஜயரட்ண மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் 2010 /2011 வரையான நிதியாண்டு காலப் பகுதியில் மிகவும் சிறப்பாக செயற்பட்ட 20 சிறந்த கம்பனிகள் கௌரவிக்கப்பட்டன.

இந்த வருடத்தின் பிஸ்னஸ் ருடே ரொப் ருவன்ரி தரப்படுத்தல்கள் இந்த நிறுவனங்களின் பிரமிக்கத்தக்க செயற்திறனை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன.

மேலும் முன்னணி பிரஜைகள் கம்பனிகளின் ஸ்திரத்தன்மையை இது வெளிப்படுத்துவதாகவும் பெறுபேறுகள் முன்னேற்றமடையாத நிறுவனங்கள் இது தொடர்பாக விழிப்படையும் வகையிலும் இந்த விருது வழங்கும் நிகழ்வு அமைந்திருந்தது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தால்(சிஎஸ்ஈ) வெளியிட்ட நிதித் தகவல்களை அடிப்படையாக வைத்து பிஸ்னஸ்ருடேரொப்ருவன்ரி கீழ்க்காணும் முக்கிய தெரிவு முறைகளைக் கொண்டு அதிசிறந்த பிரஜைகள் கம்பனிகளை தெரிவு செய்துள்ளது.

கடைப்பிடிக்கப்பட்ட தெரிவுமுறைகளில் விற்பனைப் புரள்வு, விற்பனை புரள்வு வளர்ச்சி, இலாபம், இலாப வளர்ச்சி வீதம், முதலீட்டின் மீதான வருமானம், பங்கு வீத வருமானத்தில் பெறப்பட்ட இலாபம், சந்தை முதலீடு, பரிமாற்றம் செய்யப்பட்ட பங்குகள், பெறுமதி சேர்ப்பு ஆகியன உள்ளடங்குகின்றன.

இந்த வருடத்தில் பெறப்பட்ட புள்ளிகள் கடந்த வருடத்தை விட சிறந்த முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன.

முக்கியமாக வங்கித்துறை, தொலைத்தொடர்பு, சேவை மற்றும் சில்லறை வியாபாரம் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

இந்த விருது வழங்கலில் இரண்டாவது தடவையாகவும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் முதலிடத்தைத் தட்டிக்கொண்டது.

இதன்மூலம் இலங்கையின் பலம் பொருந்திய பிரஜைகள் கம்பனி என்ற தகுதியை இது மீளவும் உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது.

சுசந்த ரத்நாயக்கவின் தந்திரோபாய நெறிப்படுத்தல்கள் இக்குழுமத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் வழி காட்டியுள்ளன.

இலங்கை டிஸ்ரிலறிஸ் கம்பனி இப்பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

டிஸ்ரிலரிஸ் நிறுவனம் நன்கு பிரபல்யமான பாரம்பரியத்தைக் கொண்டது. தனித்துவமாக செயற்படும் இயல்பைக் கொண்ட இதன் தலைவரான டி.எச்.எஸ். ஜெயவர்த்தன கிடைக்கும் அனைத்து வாய்ப்புக்களையும் திறமையாகப் பயன்படுத்துபவர்.

தொடர்ந்து மூன்றாம் இடத்தில் வந்துள்ள இலங்கை வர்த்தக வங்கி ரூ.5 பில்லியனுக்கு மேற்பட்ட இலாபத்தை பதிவு செய்துள்ளது.

முதன்முதலில் உள்நாட்டைச் சேர்ந்த தனியார் வங்கி அடைந்த சாதனை இதுவென்று குறிப்பிடலாம்.

புக்கிட் தாரா நிறுவனம் 4ஆவது இடத்தை வகிக்கும் அதேவேளை , ஹற்றன் நஷனல் 5ஆவது நிலையைப் பெற்றுள்ளது.

ஆறாவது இடத்தை டயலொக் அக்சியாட்வைத் தொடர்ந்து 7ஆவது இடத்தை சிறிலங்கா ரெலிகொம் பெற்றுக் கொண்டது.

மேலும் லங்கா ஓரிக்ஸ் லீசிங் கம்பனி, டிஎப்சிசி வங்கி, சம்பத் வங்கி ஆகியன முறையே 8ஆவது, 9ஆவது, 10 ஆவது இடங்களைப் பெற்றுள்ளன.

இவ்வரிசையில் எயிற்கின் ஸ்பென்ஸ் பெற்ற 11 இடத்தைத் தொடர்ந்து டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியரிங் 12 ஆவது இடத்தை அடைந்துள்ளது.

றிச்சட் பீரிஸ் அன்ட் கம்பனி மீண்டும் இவ் விருதுப் பட்டியலில் இடம்பெற்று 13ஆவது இடத்தை எட்டியுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஹேலிஸ் 14ஆவது இடத்திலும் கொழும்பு டொக்யார்ட், என்டிபி வங்கி மற்றும் கார்கில்ஸ்(சிலோன்) நிறுவனங்கள் முறையே 15ஆவது, 16ஆவது, 17ஆவது இடங்களைப் பெற்றுள்ளன.

பிஸ்னஸ் ருடே ரொப் ருவன்ரி இல் முதல்முறையாக விருது பெறும் ஹேமாஸ் ஹோல்டிங் நிறுவனத்திற்கு 18ஆவது இடம் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக 19ஆவது இடத்தில் செவ்ரோன் லூப்ரிக்கன்ஸ் லங்கா நிறுவனமும் 20ஆவது இடத்தில் செலான்வங்கியும் இடம்பெற்றுள்ளது.

பிஸ்னஸ் ருடே ரொப் ருவன்ரி விருதுகளுக்கான தெரிவுகள் டிசம்பர் 31 2010 மற்றும் மார்ச் 31 2011 ஆகிய தினங்களில் முடிபடைந்த நிதியாண்டு காலத்தில் இடம்பெற்ற நிதிச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றுள்ளன.







## சுந்தர்சன் நிறுவனத்தின் மாபெரும் மலிவு விற்பனை

யாழ்ப்பாணத்தின் முன்னணி இலத்திரனியல் பொருட்கள் விற்பனை நிறுவனமான சுந்தர்சனின் மாபெரும் மலிவு விற்பனை நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

மானிப்பாயில் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் விற்பனைக் கூடத்தில் நடைபெறும் மேற்படி விற்பனையில் இரட்டைக்கதவு குளிர்சாதனப் பெட்டி,வோசிங் மெசின், எல்சிடி,எல்ஈடி, சிஆர்ரி தொலைக்காட்சிகள்,வோற்றர் பில்டர், மின்சார கேத்தல்கள், ரைஸ் குக்கர், அயன் பொக்ஸ், மின் விசிறிகள், பிலண்டர்கள், காஸ் குக்கர்கள், ஹோம் தியேட்டர் சிஸ்ரம் பலவகை மின்குமிழ்கள் , கீற்றர்கள், கையடக்கத் தொலைபேசிகள், டிவிடி பிளேயர்கள் உட்பட பல பொருட்களை இவ்விற்பனைச் சந்தையில் கொள்வனவு செய்ய முடியும்.

அத்துடன் 10 ஆயிரம் ரூபாயிற்கு மேல் கொள்வனவு செய்யும் அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள் 40 பேருக்கு குளிர்சாதனப் பெட்டி, வோசிங் மெசின் மற்றும் தொலைக் காட்சிப் பெட்டி உட்பட ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

இதேவேளை இவ்விற்பனை எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளதாக நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5996.44 | 5892.69 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5231.12 | 5134.68 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 2,555.91

***உயர்வடைந்த பங்குகள்(ரூ)*** ரேணுகா சிற்றி ஹோட்டல்(344.90), எஸ்எம்பி லீசிங் (X)(0.70), ஈ.பி.கிரேஸி (1700.50), மஸ்கெலிய(19.60), லைற்ஹவுஸ் ஹோட்டல் (50.50).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ)*** பீபிள்ஸ் பினான்ஸ்(W)(3.20),ஏஸ்எப் கோ லிமிட்ட் (300.50), என்வெயர்.றிசோசஸ் (W) (16.40), என்வெயர். (W) (18.00), என்வெயர்.றிசோசஸ் (W) (17.50). **மே தகவல்கள்: www.cse.lk**

## பண்டிகை கால சலுகைகளை வழங்கும் சிறிலங்கா ரெலிகொம்

Sri Lanka Telecom
ஒரே தேசம். ஒரே குரல்.

சிறிலங்கா ரெலிகொம் நத்தார் காலத்தை முன்னிட்டு சிறப்பு தள்ளுபடிகளை வழங்குகின்றது.

சிறிலங்கா ரெலிகொம் நத்தார் இணைப்பு எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த பண்டிகை கால சலுகை டிசம்பர் முதலாம் திகதி முதல் 31ஆம் திகதிவரை செல்லுபடியாகும்.

நத்தார் இணைப்பு சலுகையில் சில முக்கியமான தள்ளுபடிகளாக ரூ.6955 இற்கு விற்பனை செய்யப்பட்ட 4 பிரிவுகளைக் கொண்ட **Wi-Fi** திசைவி ரூ.1990 இற்கு பெற்றுக் கொள்வதன் மூலம் சிறந்த அகண்ட பட்டை நுகர்வு சாத்தியமாகும்.

மேலும் சிற்றிலிங் பிற் கொடுப்பனவு மற்றும் சிற்றிலிங் நெற் இணைப்புகளுக்கு 20% தள்ளுபடியினை ரெலிகொம் வழங்குகின்றது.

மெல்லிசை சேவையில் முதல் மாத வாடகை மற்றும் பாடல்கள் பதிவிறக்கம் என்பன தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

அவற்றை தவிர தற்போதைய சிறிலங்கா ரெலிகொம் வாடிக்கையாளர்களுக்கு **PEO TV** ஆரம்ப கட்டணத்தில் 50% தள்ளுபடி வழங்கப்படவுள்ளது.மேலும் புதிய மெகா லைன் இணைப்புகளுக்கு சிறிலங்கா ரெலிகொம்மின் குடை பரிசாக வழங்கப்படவுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு **www.slt.lk** என்ற இணையத் தளத்தில் பார்வையிடமுடியும்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 112.97 | 114.88 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 174.83 | 179.21 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 146.34 | 150.63 |
| சுவிஸ் பிராங் | 119.36 | 123.44 |
| கனேடிய டொலர் | 108.67 | 112.14 |
| அவுஸ்திரேலிய டொலர் | 111.66 | 115.56 |
| சிங்கப்பூர் டொலர் | 86.09 | 88.72 |
| ஜப்பான் யென் | 1.44 | 1.48 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.01 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## வினா விடைப் போட்டியில் யாழ்.மாணவி முதலிடம்




இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் வசந்தம் தொலைக்காட்சியில் நடைபெற்ற பிரதிலாபம்-மூலதனச் சந்யையும் முதலீடுகளும் நிகழ்சியின் வினா விடைப் போட்டி **(Quiz)**யில் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.சிவாஜினி முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

முதற்கட்ட வினாவிடைப் போட்டிகள் நாடுபூராகவும் 12 நிலையங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.இதன் இறுதிச் சுற்று கடந்த 30ஆம் திகதி நடைபெற்றது. இதில் முதலிடத்தை சிவாஜினியும்,இரண்டாமிடத்தை களுத்துறை முஸ்லிம் மத்திய வித்தியாலயத்தின் எஸ்.ஜயமதியும், 3-ம் இடத்தை கொட்டகலை கேம்பிரிஜ் கல்லூரியின் கே.கிருத்திகாவும் பெற்றனர். அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி பதிவுகள் வசந்தம் தொலைக்காட்சியில் ஜனவரி 7ஆம் திகதி முதல் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 11.30க்கு ஒளிபரப்பப்படவுள்ளது.

# மேற்குலகின் சதித்திட்டங்களுக்குள்

# இஸ்லாமிய நாடுகள் சிக்கியுள்ளன

## அமைச்சர் ஹக்கீம்



(கொழும்பு)

இஸ்லாமிய உலகில் தொடர்ச்சியாக நிகழும் மக்கள் கிளர்ச்சிகள், போராட்டங்கள் சியோனி ஸ்வாதிகளின் திட்டமிட்ட சதியாகும். இன்று இராணுவ ரீதியாக பலமுள்ள இஸ்லாமிய நாடுகளே மேற்குலகத்தினால் இத்திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா எழுதிய நான்கு கலீபாக்கள் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே நீதியமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

முஸ்லிம் சமய, கலாசார, பண்பாட்டலுவலகத் திணைக்கள பணிப்பாளர் வை.எல்.எம்.நவலி தலைமையில் கொழும்பு ரன்முத்து ஹோட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் மேலும் கூறியதாவது, இஸ்லாமிய உலகில் இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் மற்றும் நடந்து முடிந்த கிளர்ச்சிகள் உண்மையில் மக்கள் எழுச்சிகளா? இன்றேல் சதிமுற்சிகளா என்று நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

எதிர்காலத்தில் இந்த உண்மைகளை எம்மால் அறிந்து கொள்ள முடியும். நிச்சயம் வரலாறுகள் நூலாசிரியர்களினால் எழுதப்படும்.

சமகால இஸ்லாமிய உலகின் எழுச்சிகள் விடயத்தில் எங்களது ஊடகங்கள் நடுநிலைமையை இழந்து விடுகின்றமையை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம்களுக்கான ஊடகமான அல்-ஜெஸீரா தொலைக்காட்சி கூட தனது நிலைப்பாட்டில் இருந்து விலகிச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

அன்று அமெரிக்கா ஈராக்குக்கு எதிராக யுத்தம் செய்தபோது நாம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டோம். சதாம் ஹுசைன் எமக்கு ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு கூறவில்லை. நாம் அன்று சதாம் ஹுசைனின் அரசியல் கோட்பாடுகளுக்காக ஆதரவு தெரிவிக்கவில்லை. ஒரு இஸ்லாமிய நாடு ஆக்கிரமிக்கப்படுகிறது என்றே ஆர்ப்பாட்டம் செய்தோம். ஆனால், லிபிய தலைவன் விடயத்தில் எமது நாட்டில் பெரிதாக எதுவும் இடம்பெறவில்லை. இவைகள்தான் எமது சமகால வரலாறுகள் என்றார்.

இந்நூலின் சிறப்பு பிரதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் மற்றும் தொழிலதிபர் முஸ்லிம் சாலாஹுதீன் உள்ளிட்ட பலர் பெற்றுக் கொண்டனர். (அ-2)

# சிறையில் கைதி தாக்கப்பட்டமைக்கு மனித உரிமை அமைப்பிடம் முறையீடு

(கொழும்பு)

புதிய மகசின் சிறைச்சாலையின் ஜே/ பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புலோலி பருத்தித்துறை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இரண்டு பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் நேற்று முன்தினம் சிறைச்சாலை அதிகாரிகளினால் தாக்குதலுக்கு உள்ளானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய குடியுரிமை பெற்றுள்ள இவர் கடந்த 03.04.2007 இல் கொழும்பு விமான நிலையத்தில் வைத்து விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவர் கோவிலுக்கு நேற்று முன்தினம் சென்ற வேளை சிறைச்சாலை பாதுகாவலர் அவரைத் தடுத்து நிறுத்தி புலிகளெல்லாம் இங்கு கோவிலுக்குச் செல்ல முடியாது என கூறிக்கொண்டு கடுமையான முறையில் தாக்கி இருக்கிறார்.

நேற்று முன்தினம் தான் தாக்குதலுக்குள்ளானதைப் பற்றி சிறைச்சாலை அமைச்சர் மனித உரிமைகள் அமைப்பு மற்றும் பிரித்தானிய தூதரகம் போன்ற இடங்களுக்கு தெரியப்படுத்தி தனது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியுள்ளதாக குறித்த கைதி தெரிவித்துள்ளார்.

தான் கைது செய்யப்பட்டு 4 வருடங்கள் கடந்த நிலையில் தனது விடுதலை தொடர்பாக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றை உச்ச நீதிமன்றத்தில் தான் பதிவு செய்துள்ளதாகவும் ஆனால் தனது விடுதலை தொடர்பாக எந்தவிதமான செயற்பாடுகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# மனித உரிமைகள் செயற்றிட்டத்திற்கு ஐ.நா.வின் நிதியைப் பெறும் திட்டம்

## ஜனாதிபதியால் நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டமானது இலங்கை அரசாங்கத்தின் நிதியின் மூலமாக மாத்திரமே செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் இதற்கு ஐ.நா. விடமிருந்து நிதி பெறப்படக்கூடாது எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு இரு நாட்களுக்கு முன் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி இப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

இம்மனித உரிமை செயற்றிட்டத்தை அமுல்படுத்த கடந்த செப்டெம்பர் மாதம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாகவும் அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறினார்.

அமைச்சரவைப் பத்திரமொன்றின் படி இத்திட்டத்திற்காக ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் அமெரிக்க டொலர்(சுமார்15 மில்லியன்) நிதியை ஐ.நா. அபிவிருத்தி திட்டத்திலிருந்து (யூ.என்.டி.பி) பெறுவதற்கு அமைச்சரவையின் அனுமதியை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் விவகாரத்திற்கான ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மஹிந்த சமரசிங்க கோரியிருந்தார்.

மனித உரிமைகள் செயற்றிட்டத்தை வரைதல், ஆவணங்கள் தொடர்பான இணைப்புச் செயற்பாடுகள், சந்திப்புகள், ஆலோசனைகளுக்கு உதவியளித்தல், மூன்று மொழிகளிலும் மொழிபெயர்ப்பு, ஒப்புநோக்குதல், அச்சிடுதல் சம்பந்தப்பட்ட இணையத்தளத்தை மேம்படுத்துதல் முதலான நட்வடிக்கைகளுக்கான செலவுகளும் இவற்றில் அடங்கும் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டிருந்தார். (அ-2)

# கட்சித் தலைவரும் பிரதித்தலைவரும் ஒரே மேடை நிகழ்வில் பங்கேற்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய ஆகியோர் நேற்று ஒரே மேடையில் கருத்து தெரிவித்தனர்.

கல்கிச தருமபால விகாரையில் இடம்பெற்ற நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வொன்றில் இவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்துரைத்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் குறித்து பொது இணக்கப்பாடு வரவேண்டிய முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்கள் சாதாரண சமூகம் ஒன்றினை கட்டியெழுப்புவதற்கான பயணத்தில் அடிப்படையாக கொள்ளப்பட வேண்டும் என பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

இதனிடையே ஐ.தே.க.கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சங்கம், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரம சிங்க உட்பட முக்கியஸ்தர்களுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

மூன்று முக்கிய யோசனைகளை மத்திய குழுவில் முன்வைக்குமாறு கோரியே கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அந்த பிரதித்தலைவர் கரு ஜயசூரியவை கட்சித் தலைமைத்துவத்திற்கு நியமித்தல், பன்னாட்டு சம்மேளனத்தை டிசெம்பரில் நடத்துதல் போன்ற சில விடயங்கள் அதில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

குறித்த தீர்மானம் தொடர்பில் ஐ.தே.க. பொதுச் செயலாளருக்கு கடிதம் மூலமாக அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஐ.தே.கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சங்க செயலாளர் மகித் குணசேகர தெரிவித்துள்ளார். (அ-11)

# 13 ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்

(கொழும்பு)

மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் அரசாங்கம் முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

முதலில் மக்களின் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் பின்னர் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு பரிந்துரைகளை அமுல்படுத்த முடியும்.

நாட்டில் கடத்தல் சம்பவங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் கூட இந்தளவிற்கு மர்மமான கடத்தல் சம்பவங்கள் இடம்பெறவில்லை.

கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் எவ்வித பொறுப்புணர்ச்சியுமின்றி நகைப்புக்குரிய கருத்துக்களை கெஹலிய வெளியிட்டு வருகிறார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பிரதான கருவியாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையை பயன்படுத்தக்கூடாது.

ஆணைக்குழுவின் அறிக்கை சில விடயங்கள் குறித்து கவனம் செலுத்தியுள்ள போதிலும் கவனம் செலுத்தப்படாத விடயங்களும் காணப்படுகின்றன என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்ட அமுலாக்கம் மற்றும் வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றல் என்பன உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது யுத்தம் இடம்பெறவில்லை எனவும் இதனால் வடக்கில் இராணுவத்தினரின் பிரசன்னம் அநாவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு கிழக்கில் முழுமையான சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டுமென அவர் கோரியுள்ளார். அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் தேசிய இனப் பிரச்சின்னக்கு தீர்வு காண்பது குறித்து கவனம் செலுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பொன்சேகாவின் விடுதலை குறித்து டிரான் அலஸ், ஜனாதிபதியுடன் பேச்சு

(கொழும்பு)

முன்னாள் இராணுத்தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் நோக்கில் ஜனநாயகத் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் வர்த்தகருமான டிரான் அலஸ், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு மாதங்களாக பேச்சவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஜனாதிபதி பொது மன்னிப்பு மூலமாக சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. சரத் பொன்சேகாவின் அனுமதியுடன் இந்தப் பேச்சுவார்த்தைகளை நடத்தப்பட்டு வருவதாக நம்பகத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைக்கப் பெற்றுள்ளபோது இந்த தகவல் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. (அ-2)

## சுகோய் ரக போர் விமானங்களை ரஷ்யா இந்தியாவுக்கு வழங்கும்

(மொஸ்கோ)

இந்தியாவுக்கு மேலும் 42 சுகோய் ரக போர் விமானங்களை ரஷ்யா வழங்கியுள்ளது. இது தொடர்பாக ஒப்பந்தம் நேற்று முன்தினம் கையெழுத்திடப்பட்டுள்ளது. பிரதமர் மன்மோகன் சிங் மூன்று நாட்கள் பயணமாக ரஷ்யா சென்றார். அப்போது ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே இராணுவம், வர்த்தகம், சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் ஐந்து முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இந்தியாவுக்கு சுகோய் ரக போர் விமானங்களை ஏற்கனவே ரஷ்யா வழங்கியுள்ளது. இந்நிலையில் நேற்று கையெழுத்தான ஒப்பந்தப்படி மேலும் 42 போர் விமானங்கள் வழங்கப்படவுள்ளன. இந்த விமானங்கள் சுகோய் 30 எம்.கே.ஐ.வகையை சேர்ந்தவை. மேலும் சுகோய் ரக விமானங்களை இந்தியாவும் ரஷ்யாவும் இணைந்து தயாரிப்பதற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது தொடர்பான ஒப்பந்தமும் கையெழுத்தானது.

**போர்க்கப்பல் வருகை**

ரஷ்ய ஜனாதிபதி மெத்வதேவுடன் பேச்சு நடத்திய பிரதமர் மன்மோகன் சிங் ரஷ்யா தரப்பில் இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ள கோர்ஷ்கோவ் விமானம் தாங்கி போர் கப்பல் குறித்து சில விபரங்களை கேட்டறிந்தார்.

இது குறித்து இந்திய வெளியுறவு துறை செயலர் ரஞ்சன் மத்தாய் கூறுகையில், இந்த கப்பல் இந்தியா வந்ததும் அதன் பெயர் ஐ.என்.எஸ்.விக்ரமாதித்யா என மாற்றப்படும். இந்த கப்பலின் வருகையை இந்தியா மிகவும் எதிர்பார்த்துள்ளது. ரஷ்ய ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து இந்த கப்பலை டெலிவரி செய்வதில் தாமதம் ஏற்படாது என ரஷ்யா தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது என்றார். (அ-2)

## அணுமின் நிலையம் குறித்த பிரதமரின் கருத்து; தமிழக முதல்வர் வியப்பு

(சென்னை)

கூடங்குளம் அணு மின்நிலையம் இன்னும் சில தினங்களில் செயற்படத் தொடங்கும் என பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்திருப்பது வியப்பை ஏற்படுத்துவதாக உள்ளது என முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இது குறித்து பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது, கூடங்குளம் மக்களின் அச்சத்தை போக்கிய பின்னரே அணு மின் நிலையம் தொடர்பான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த சூழலில் கூடங்குளம் அணுமின் நிலையம் இன்னும் சில தினங்களில் இயங்கும் என தெரிவித்திருப்பது வியப்பை ஏற்படுத்துவதாக உள்ளது.

அப்பகுதி மக்களின் அச்சத்தை போக்கும் வகையில் மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா? கூடங்குளம் பகுதி மக்கள் தெரிவிக்கும் திருப்திகரமான கருத்துதான் எனக்கும் தமிழக அரசுக்கும் முக்கியம் என அவர் தெரிவித்துள்ளார்.



முல்லைப்பெரியாறு அணை பிரச்சினையில் தேனி மாவட்டத்தில் நிலவும் பதற்றமான நிலை குறித்து முதல்வர் ஜெயலலிதா, தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை பொலிஸ் உயர் அதிகாரி களுடன் விரிவாக ஆலோசனை நடத்தினார்.

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரளாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து மாநிலம் முழுவதும் பரவலாக ஆர்ப்பாட்டங்கள் நடந்து வருகின்றன. பல ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் ஒன்று திரண்டு கேரளத்திற்கு நுழைய முயற்சிப்பது கேரள முதல்வர் கொடும்பாவி எரிப்பு, கண்டன ஆர்ப்பாட்டம் என தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்களின் போராட்டங்களை பொலிஸார் அடக்க முயலும் போது இரு தரப்பினரும் ஒருவருக்கு ஒருவர் தாக்குதலில் ஈடுபடும் சம்பவங்களும் நடக்கின்றன. எனினும் மக்களிடையே அவர்களின் போராட்டம் நாளுக்கு நாள் தீவிரம் அடைந்து வருகின்றது. (அ-2)

## உலகின் அணுமின் நிலையங்களில் கூடங்குளமே பாதுகாப்பானது

கூடங்குளம் அணுமின் திட்டத்துக்காக 14 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, அந்தத் திட்டத்தை தொடர்ந்து கிடப்பில் போட முடியாது. அணு மின் நிலையத்தை செயற்படாமல் வைத்திருக்க முடியாது என பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

ரஷ்யாவுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்ட பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் டில்லி திரும்பும் போது சிறப்பு விமானத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது, கூடங்குளம் அணு மின் திட்டத்தின் பாதுகாப்புத் தன்மை குறித்து சிலர் கவலை எழுப்புகின்றனர். இதனால் சில பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. உலகில் உள்ள அணு மின் திட்டங்களிலேயே மிகவும் பாதுகாப்பானது கூடங்குளம் திட்டம் என்பதை உறுதி செய்ய மத்திய அரசு அதிக முயற்சி எடுத்துள்ளது. இந்தத் திட்டத்திற்காக 14 ஆயிரம் கோடி ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வளவு தொகையை முதலீடு செய்த பின் அந்தத் திட்டத்தை கிடப்பில் போடமுடியாது.

அந்த மின் நிலையத்தை செயற்படாமல் வைத்திருக்க முடியாது. தமிழகத்தில் ஏற்கனவே மின் பற்றாக்குறை உள்ளது. இந்நிலையில் 2 ஆயிரம் மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யும் இந்தத் திட்டத்தை கிடப்பில் போடுவது சரியல்ல என்பதை தமிழக மக்களும் புரிந்து




கொள்வர் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இந்த அணுமின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும். அங்கு நடந்து வரும் போராட்டங்கள் மிகையானது. அளவுக்கு மீறியது நான் மட்டுமல்ல எம்.பி.க்கள் உள்ளிட்ட அனைவரின் கருத்தும் இதுதான். இந்த விவகாரத்தில் இறுதியாக நல்ல தீர்வு ஏற்படும் என்று நம்பிக்கை உள்ளது.

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தமிழக முதல்வரும் கேரள முதல்வரும் இணைந்து நல்ல தீர்வு காண்பார்கள் என நம்புகிறேன். இவ்வாறு பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

பிரதமர் கூறுகையில், பாராளுமன்ற நடப்பு கூட்டத் தொடரிலேயே லோக்பால் மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என அரசு உறுதியாக உள்ளது. இந்த விடயத்தில் அரசின் நேர்மையான செயற்பாட்டை சந்தேகிக்கக்கூடாது. இந்த மசோதா குறித்து அமைச்சரவை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும். இதற்கு பின் மசோதா பாராளுமன்றில் தாக்கல் செய்யப்படும். நாளை அல்லது அதற்கு அடுத்த நாட்களில் பாராளுமன்ற மசோதா தாக்கல் செய்யப்பட வாய்ப்புள்ளது. அதற்கு பின் இந்த விவகாரம் குறித்து பாராளுமன்றம் தான் முடிவு செய்யும் என்றார். (அ-2)

## பாரதச் செய்திகள்



முல்லைப் பெரியாறு உண்மை நிலை என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் முல்லை பெரியாறு குறித்து தயாரிக்கப்பட்ட இறுவெட்டை பழ.நெடுமாறன் வெளியிட்டார். அருகில் ம.தி.மு.க. பொது செயலர் வைகோ மற்றும் பொதுப் பணித்துறை முன்னாள் தலைமை இன்ஜினியர் சுப்ரமணியம் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

## உலக விண்வெளி கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்த அப்துல்கலாம் பரிந்துரை

உலக விண்வெளி கண்காணிப்பு குழுவை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அணு விஞ்ஞானியும் முன்னாள் ஜனாதிபதியுமான அப்துல்கலாம் யோசனை கூறியுள்ளார். கேரள மாநில தலைநகர் திருவனந்தபுரத்தில் விண்வெளி போக்குவரத்து முறையும் வாய்ப்புகளும் சவால்களும் என்ற தலைப்பில் 3 நாட்கள் மாநாடு தொடக்க விழாவில் அப்துல்கலாம் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது அவர் கூறுகையில், விண்வெளியில் ஒவ்வொரு நாடுகளின் நடவடிக்கைகளையும் கண்காணிக்க உலக விண்வெளி கண்காணிப்பு குழுவை ஏற்படுத்த வேண்டும் என்று கூறினார். எரிசக்தி, தண்ணீர் பற்றாக்குறை மற்றும் சுகாதார பிரச்சினைகள் உலக அளவில் உள்ளன. அதனால் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உலக நாடுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து தீர்வுகாண வேண்டும். எரிசக்தி பற்றாக்குறையை உடனடியாக போக்க விண்வெளியை அடிப்படையாக கொண்டு சூரிய சக்தியில் இயங்கும் தொழிற்சாலைகளை அமைத்தால் அதிலிருந்து அதிகளவு மின்சாரம் தயாரிக்க முடியும் என்றும் கலாம் அற்புதமான யோசனையை தெரிவித்தார்.

விண்வெளியை பயன்படுத்துவதில் இந்தியா ஒரு முக்கிய நாடாக உருவாகி வருகிறது என்று இஸ்ரோ தலைவர் டாக்டர் கே.இராதாகிருஷ்ணன் பேசுகையில் கூறினார். விண்கலம், ரொக்கட், செயற்கைக்கோள் அதிக அளவில் விண்ணில் ஏவப்படுவதால் விண்வெளியிலும் பிரச்சினை உருவாகி வருகிறது என்றார். (அ-2)

## கேரள அரசு முடிவை மாற்றாவிட்டால் தமிழகம் பொருளாதார முற்றுகையிடும்

முல்லைப்பெரியாறு அணைப் பிரச்சினையில் கேரள அரசு தனது முடிவை மாற்றிக் கொள்ளாவிட்டால் தமிழகத்தில் இருந்து நிரந்தரமாக அம்மாநிலத்துக்கு உணவுப் பொருட்களை அனுப்பாமல் பொருளாதார முற்றுகை நடாத்தப்படும் என்று ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ எச்சரித்தார்.

ம.தி.மு.க. சார்பில் முல்லைப் பெரியாறு விளக்க\கூட்டம் சென்னையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இந்நிகழ்ச்சியில் வைகோ பேசுகையில், கேரள அரசும் அங்குள்ள அரசியல் கட்சியினரும் நமக்கு உரிமையுள்ள முல்லைப் பெரியாறுஅணையை உடைத்தே விடுவது என்று முடிவு செய்து விட்டார்கள். இந்த நேரத்தில் தமிழகத்தின் உரிமையை காக்க நம்முடைய இளைஞர்கள் தயாராகி வருகிறார்கள்.

கேரளாவில் தொடர்ந்து தமிழர்கள் தாக்கப்படுவதை கண்டிக்கிறேன். இனிமேலும் அங்கே தமிழர்கள் தாக்கப்பட்டால் நாங்கள் சும்மா இருக்கமாட்டோம். போராட்டத்தை கைவிட்டு விட்டோம் என்று பிரதமருக்கு தெரிவித்து விட்டு அணையை உடைப்பதற்கு 6 கோடி ரூபா ஒதுக்கியிருக்கிறார்கள். மத்திய அரசு தனது கடமையை செய்ய தவறி விட்டது.

அணையை உடைக்கும் திட்டத்தை கேரள அரசு கைவிட வேண்டும் என்பதை வலியுறுத்தி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தமிழகத்தில் இருந்து கேரளா செல்லும் 13 வீதிகளில் அறவழி போராட்டம் நடைபெறும். பொருளாதார முற்றுகை போராட்டமாக இது அமையும். தமிழகத்தில் இருந்து வாகனங்களில் உணவு பொருட்கள் எதுவும் கேரளாவிற்கு செல்ல அனுமதிக்க மாட்டோம். இந்த அறவழி போராட்டத்தில் அனைத்து அமைப்புகளும் கலந்து கொள்கின்றன.



இதற்கு பின்னர் கேரள அரசு தனது முடிவை மாற்றிக் கொள்ளாவிட்டால் தமிழகத்தில் இருந்து நிரந்தரமாக கேரளாவிற்கு உணவு பொருட்களை அனுப்பாமல் பொருளாதார முற்றுகையை நடத்துவோம் என்று கேரள அரசை நாங்கள் எச்சரிக்கிறோம். நமக்கு தண்ணீர் தராமல் சதி வேலையில் ஈடுபடும் கேரளாவிற்கு நம்முடைய சக்தியை காட்டுவோம் என்றார் வைகோ. (அ-2)

## ஆங்கிலம் பேசத்தெரிந்தால் மட்டுமே பிரிட்டனில் குடியேற முடியும்

### உயர்நீதிமன்றம் தீர்ப்பு

ஆங்கிலம் பேச தெரியாதவர்கள் இங்கிலாந்தில் குடியேறத்தடை விதிக்கும் சட்டம் செல்லும் என்று லண்டன் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பல்வேறு வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் இங்கிலாந்தில் குடியேறுகின்றனர்.அவர்கள் குடியுரிமைபெற ஆங்கிலம் பேசத் தெரிந்திருக்க வேண்டும் என்று கடந்த ஆண்டு நவம்பர் மாதம் புதுசட்டம் கொண்டு வரப்பட்டது.இதை எதிர்த்து இந்தியாவைச் சேர்ந்த ரஷீதா சாப்தி(54) என்பவர் லண்டன் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

தனது மனுவில் என் கணவருக்கு ஆங்கிலம் பேசத்தெரியாததால் இங்கிலாந்தில் குடியேற முடியவில்லை.புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள குடியேற்றச் சட்டம் சட்டவிரோதமானது.இது இன,மொழிப்பாகுபாடானது.அதை இரத்துச்செய்ய வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பீட்சன், ஆங்கிலம் பேசத் தெரிந்திருக்க வேண்டும் என்ற சட்டம் தம்பதியின் குடும்ப வாழ்க்கையில் தலையிடவில்லை.அதேபோல் இங்கிலாந்தில் தங்கியிருக்கும் வெளிநாட்டினர் திருமணம் செய்து கொள்வதையோ, திருமணத்திற்காக அவர்கள் வெளிநாடு செல்வதையோ இந்த சட்டம் தடுக்கவில்லை.

இங்கிலாந்தில் குடியேறுபவர்களுக்கு ஆங்கிலம் பேசத் தெரிந்திருந்தால் சமுதாயத்தில் ஒன்றி பழகமுடியும்.மக்களுடன் எளிதாக ஒன்றிணைய முடியும் என்பதுதான் நோக்கம் என்று தீர்ப்பளித்து வழக்கை தள்ளுபடி செய்தார். (அ-2)

## குவைத்தில் குடியுரிமை தரவேண்டும் வெளிநாட்டினர் ஆர்ப்பாட்டம்

### 400இக்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

குவைத்தில் வசித்து வரும் வெளிநாட்டினருக்கு குடியுரிமை தர வேண்டும் என 400 இற்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குவைத்திலிருந்து 50 கி.மீ. தொலைவில் உள்ள ஜாஹ்ரா பகுதியில் மதிய நேரத் தொழுகை முடிந்த பின் கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடாமல் கலைந்து செல்லுமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்தனர். இருப்பினும் மக்கள் கலைந்து செல்லாததால் தண்ணீரை அடித்தும் கண்ணீர் புகைக்குண்டு வீசியும் கூட்டதை கலைத்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 20க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அரசின் இந்த செயலுக்கு எதிர்க்கட்சியினரும் பல்வேறு அரசியல் கட்சியினரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அமைதியாகப் போராடியவர்கள் மீது வன்முறையைப் பயன்படுத்தியது தவறு. இது வெளிநாட்டினரின் மத்தியில் நம் நாட்டின் மதிப்பை குறைக்கும் வகையில் அமைந்துள்ளது என குவைத் மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது. கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இதேபோல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 50 இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நான்கு நாட்களுக்கு முன்பு அவர்களின் வழக்கு நீதிமன்ற விசாரணைக்கு வந்தது. இதையடுத்தே இந்த ஆர்ப்பாட்டம் நடந்ததாக தெரிகின்றது.

குவைத் நாட்டின் சட்டப்படி குவைத்தில் வசிக்கும் வெளிநாட்டினருக்கு குடியுரிமை கிடையாது. அதேபோல் அவர்கள் பொதுஇடங்களில் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவும் அனுமதி கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பிலிப்பைன்சில் புயல்; 521 பேர் உயிரிழப்பு

### பலரை காணவில்லை



பிலிப்பைன்ஸ் நாட்டில் தெற்கு பகுதியில் திடீரென வாஷி என்ற சூறாவளி புயல் வீசியது. இதனால் மக்கள் மிண்டானோ தீவின் கடற்கரை பகுதியில் பலத்த மழை கொட்டியது.

அதை தொடர்ந்து ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. எனவே ஆற்றின் கரைகள் உடைந்து ஊருக்குள் வெள்ளம் புகுந்தது. அதை தொடர்ந்து மிண்டானோ தீவில் உள்ள ஆலிகான், பொலாங்கோ ககயனடி ஒரோ உள்ளிட்ட நகரங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வீதிகளிலும் தெருக்களிலும் 11 அடி உயரத்திற்கு தண்ணீர் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது. அதனால் வீடுகள் தண்ணீரில் மூழ்கின.

நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணிக்கு மழை கொட்டியது. மழையை மக்கள் பொருட்படுத்தாது அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். இதனால் அவர்களுக்கு எந்த விபரமும் தெரியவில்லை. மழை வெள்ளத்தில் வீடுகள் இடிந்தன. பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இச்சம்பவங்களில் இதுவரை சுமார் 521 பேர் வரை உயிரிழந்தனர்.

தகவல் அறிந்ததும் பொலிஸாரும் இராணுவ வீரர்களும் மீட்பு பணிக்கு அனுப்பப்பட்டனர்.மீட்பு பணியில் 20 ஆயிரம் இராணுவ வீரர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

இடிபாடுகளை அகற்றி உயிரிழந்தவர்களை மீட்டு வருகின்றனர். காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் ஆயிரம் பேர் வரை காணவில்லை. இவர்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. எனவே அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது.

இல்லிகான் பகுதியில் தொடர்ந்து மழை பெய்கிறது. இதனால் வெள்ளப்பெருக்கு இன்னும் குறையவில்லை. இதற்கிடையே பலாவன் தீவை புயல் தாக்கும் அபாயம் உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வாஷி புயல் வலுவிழந்து சுலு கடலை கடக்கும் என கூறப்பட்டுள்ளது. (அ-2)

## அத்துமீறி தாக்குதல் நடத்துவதை அமெ. நிறுத்தவேண்டும்- கிலானி

ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் எல்லையில் நேட்டோ படைத்தாக்குதலில் 24 வீரர்கள் பலியானதற்கு பின் பாகிஸ்தான், அமெரிக்க உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பாகிஸ்தான் பிரதமர் கிலானி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தீவிரவாத ஒழிப்பு என்றபேரில் பாகிஸ்தான் எல்லைக்குள் அமெரிக்கா அத்துமீறி நுழைவதை நிறுத்த வேண்டும். தீவிரவாத ஒழிப்பில் பொது எதிரியை ஒழிப்பதில் அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் முழு ஒத்துழைப்பு வழங்கும். அதேநேரத்தில் பாகிஸ்தான் எல்லையையும் அமெரிக்கா மதித்து நடக்க வேண்டும். ஆளில்லா உளவு விமானங்கள் டிரோன்மூலம் திடீர் திடீரென தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டுமென கூறினார்.(அ-2)

## இந்தோ.வில் அகதிகளின் கப்பல் கடலில் மூழ்கியது

### 400 பேரை மீட்கும் நடவடிக்கை தொடர்கிறது



ஆப்கானிஸ்தான், துருக்கி, ஈரான் ஆகிய நாடுகளை சேர்ந்த அகதிகள் ஒரு சிறிய கப்பலில் அவுஸ்திரேலியாவுக்கு அகதிகளாக புறப்பட்டு வந்தனர். இந்தோனேசிய கடல் பகுதியில் வந்தபோது அந்த கப்பல் திடீரென உடைந்து கடலில் மூழ்கியது.

இதுபற்றி தகவல் அறிந்ததும் மீனவர்களும் இந்தோனேசிய கடற்படையினரும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.அந்த கப்பலில் 40 குழந்தைகள் உட்பட 400 பேர் பயணம் செய்ததாக தெரிகின்றது. கப்பல் மூழ்கியதால் அவர்களின் கதி என்ன என்று தெரியவில்லை. அளவுக்கு அதிகமானவர்களை ஏற்றிதால் கப்பலில் விரிசல் ஏற்பட்டதாக கூறப்படுகின்றது. (அ-2)

## எகிப்தில் மீண்டும் கலவரம் ஆரம்பம்; ஒன்பது பேர் உயிரிழப்பு; பலர் படுகாயம்



(கெய்ரோ)

எகிப்து நாட்டில் பத்து மாதங்களுக்கு பின்னர் மீண்டும் கலவரம் ஏற்பட்டதில் ஒன்பது பேர் உயிரிழந்தனர்.300இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இந்நாட்டில் ஜனாதிபதியாக பதவி வகித்து வந்த ஹோஸ்னி முபாரக் பதவி விலகவேண்டும் என நாடு முழுவதும் போராட்டம் நடைபெற்றது.

இதனால் ஜனாதிபதி தன்னுடைய பதவியை இராஜினாமா செய்தார்.தொடர்ந்து இராணுவ ஆட்சியின் கீழ் அதிகாரம் கொண்டுவரப்பட்டது.

ஆறுமாத காலத்திற்குள் நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.இதனையடுத்து நாடாளுமன்ற முதல் கட்ட தேர்தல் நடைபெற்றது.

தேர்தலில் இஸ்லாமியக் கட்சிகளுக்கிடையே போட்டி உருவானது.இதன் காரணமாக கலவரம் மூண்டது. தொடர்ந்து நடைபெற்ற கலவரத்தை அடக்குவதற்காக இராணுவத்தினர், பொதுமக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

பொதுமக்களும் இராணுவத்தின் வாகனங்களை தீயிட்டு கொளுத்தினர்.இரு தரப்பினரிடையே மோதல் நீடித்துவருவதால் கலவரத்தில் பலியானோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. (அ-2)




## யூரோ மண்டல நிதிநெருக்கடியால் ஜேர்மனியில் வேலையிழப்பு

யூரோ மண்டல நிதி நெருக்கடியால் ஜேர்மனியில் கோடிக்கணக்கானோர் தங்களது வேலைவாய்ப்பை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஜேர்மனி பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளுடன் ஏற்றுமதி வணிகத்தை மேற்கொள்வதால் யூரோ நெருக்கடி ஜேர்மனியின் ஏற்றுமதித் தொழிலை கடுமையாக பாதித்துள்ளது.

இதனால் அங்கு பணியாற்றும் 4.4 மில்லியன் பேர் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் புரோக்னோஸ் கன்சல்ட்டிங் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜேர்மனி நாட்டின் ஏற்றுமதி வர்த்தகம் பெரும்பாலும் போத்துக்கல், கிரீஸ் மற்றும் ஸ்பெயின் நாடுகளுடன் நடைபெறுகின்றது. ஒரு மில்லியன் பணியாளர் இந்த நாடுகளுடன் நடைபெறும் ஏற்றமதி சார்ந்த நிறுவனங்களில் பணிபுரிகின்றனர்.

ஏற்றுமதி தொழில் நலிவடைவதால் ஜேர்மனியிலும் நிதி நெருக்கடியும் வேலையிழப்பும் ஏற்படும் என்பது உறுதியாகின்றது.

ஏனெனில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருந்தாலும் கூட ஏற்றுமதித்துறை வலுவாக இருப்பதாகவும் வேலைவாய்ப்புக்கு அபாயம் நேரிடாது என்றும் தெரிவித்துள்ளது. (அ-2)

கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி –கிளியே
நாளில் மறப்பாரடி.
– பாரதியார்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அரசாங்க சுற்று நிருபங்கள் தமிழ் மொழியிலும் இருக்க வேண்டும்

## யாழ். அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அலுவலங்கள், திணைக்களங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் மற்றும் சுற்று நிருபங்களை தமிழ்,சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் அனுப்பி வைக்க கூடிய நடவடிக்கைகளை தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற் கொள்ள வேண்டும் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தென்னிலங்கை கலைஞர்களின் இசை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; கடிதங்கள், சுற்று நிருபங்களை அமைச்சுக்கள் தனிச் சிங்களத்தில் அனுப்பி வைப்பதனால் இங்குள்ள அரச அதிகாரிகள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் அவற்றினை அனுப்பி வைப்பதன் மூலம் தொடரும் இத்தகைய நெருக்கடி நிலைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும்.

அமைச்சர் வாசு தேவ நாணயக்கார பாராளுமன்றத்தில் மொழிப்பிரச்சினை தொடர்பாக பேசி வருவதை நான் அறிவேன்.

கடந்த காலங்களில் தமிழர்கள், சிங்களவர்களிடையே பிரிவினை ஏற்படுத்தப் பட்டுள்ளது.

ஆனால் யுத்தத்திற்கு முன்பும் அத்தகைய நிலையில்லை. அத்தோடு யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியிலும் அந்த நிலை முற்றாக மாற்றமடைந்து வருகின்றது.

தமிழ், சிங்கள மக்களிடையே ஒருமைப் பாட்டை ஏற்படுத்த மொழி தடையாக இருந்து வருகின்றது. அந்த நிலை எதிர்காலத்தில் மாற்றப்பட வேண்டும்.

சிங்களவர்கள் தமிழ் மொழியையும் தமிழர்கள் சிங்கள மொழியையும் நன்கு அறிந்து வைத்திருக்கவேண்டும். குறிப்பாக அரச சேவையில் உள்ளவர்கள் இந்த இரண்டு மொழியிலும் தமது திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மேலும் இங்குள்ள அரச அதிகாரிகள் சிங்கள மொழி அறிவை வளர்த்துக் கொள்ள அமைச்சர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அப்போது தான் ஒருமைப் பாட்டை வளர்த்துக் கொள்ள முடியும்.

எனவே கடிதங்கள் சுற்று நிருபங்களை தமிழ் மற்றும் சிங்கள் மொழிகளில் அனுப்பி வைக்க கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்நிகழ்வில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப் பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இந்திய துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் மற்றும் பலர் கலந்து கொண்டனர் (எ-6)

## பண்ணை வீதியில் மாபெரும் பயிலரங்கு வடக்கார் பரதம்-தெற்கார் கண்டி நடனம்

தீவகத்தையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும்பண்ணைவீதியின்படுமோசமானநிலையைக் காணும்போது, வேதனை தாளமுடியவில்லை.

பண்ணை வீதியில் பயணிக்கும் வாகனங்கள் விழுந்துஎழுந்து, சரிந்து நிமிர்ந்து செல்வதைப் பார்க்கும் போது நடனப் பயிற்சி வழங்கும் பயிலரங்கு போல ஒரு நினைப்பு. இந்த நினைப்பில் நம் சிந்தையில் ஒரு கற்பனை.

இதோ! இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசு மக்களுக்கு ஓர் நற்செய்தி.

பண்ணை வீதியில் மாபெரும் பயிலரங்கு..

முன்பு நடனம் பழகாதவர்களுக்கு நல்லதோர் வாய்ப்பு. நடனம் பழகுவோருக்கு அரிய வரப்பிரசாதம்.

எந்த நாட்டிலும் இல்லாத ஒரு பெரும் கிடைப்பனவு.வீதியை பயிலரங்காக்கி வடக்கு மக்களுக்கு பரதநாட்டியமும் தெற்கு மக்களுக்கு கண்டி நடனமும் பயிற்றப்படும்.

பயிலரங்கின் பிரதம விருந்தினர்கள்: வட பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ். அரச அதிபர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர்.

சிறப்பு விருந்தினர்கள்: பண்ணை வீதியை ஒப்பந்தம் எடுத்த புண்ணியவான்கள்.

**பயிலுநர்(1):** தீவகத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகத்திற்கும் செல்லும் பயணிகள்.

**பயிலுநர்கள்(2):** நயினாதீவு மற்றும் தீவகத்தின் ஏனைய பகுதிகளுக்குச் சுற்றுலாச் செல்லும் தென்பகுதி மக்கள்.

**பயிற்சி வகை:**
வடக்கு மக்களுக்கு பரதநாட்டியம்
தெற்கு மக்களுக்கு கண்டி நடனம்
**தயாரிப்பு:** அரசு
**நெறியாள்கை:** வீதி அபிவிருத்தி அதிகாரசபை
**பயிற்றுநர்கள்:** வாகன சாரதிகள்.
இதோ வடக்கு மக்களுக்கான பரத நாட்டியம்.
தாம்...தீம்...தோம். தகிடதத்தோம்.. தாம்... தீம்...தோம்.
தெற்கு மக்களுக்கான கண்டி நடனம்:
டமுக்கு டுமுக்கு...டமுக்கு டுமுக்கு...டமுக்கு டுமுக்கு...
**பயிலுநர்கள்:** ஆ... ஊ... கடவுளே!
கவிழுந்தால் கடல். காப்பாற்ற யாரும் இல்லை.
கொடுக்கல் வாங்கல்களைக் கூட வீட்டில் சொல்லிவிட்டு வரவில்லை.
குறிகாட்டுவான் வரைக்கும் இதுதான் அவலமாம்.

**பயிற்றுநர்:**(வாகன சாரதி): கடவுளே வாகனம் கிடங்கில் விழுந்து வில்லுத் தகடு உடைந்து விட்டது.என் செய்வோம். வடக்கில் வசந்தம் என்றார்கள்.ஆனால் இங்கோ...

**முதியவர் ஒருவர்:** தம்பி...உன்ர வாகனத் தின் வில்லுத்தகடுதான் உடைஞ்சிருக்கு. ஆனால் என்ர விலா எலும்பு முறிந்து போயிற்று.

இந்தப் பயிலரங்கு இங்கே நடந்து கொண்டிருக்கும்போது அமெரிக்க,அவுஸ்திரேலிய, இந்தியத் தூதுவர்கள் யாழ்ப்பாணத்தில் சந்திப்பு நடத்துகின்றனர்...

**தூதுவர்:**எப்படி இருக்கிறது யாழ்ப்பாணம்?
**சந்திப்பவர்கள்:**நல்லம்... நல்லம்... எல்லாம் நல்லம்.
**தூதுவர்:**யாழ்ப்பாண அபிவிருத்தி நிலைமை எப்படியிருக்கு?
**சந்திப்பவர்கள்:**பிரமாதம் மிகப் பிரமாதம்.
**தூதுவர்கள்:** குட்... குட்...வெரிக்குட். அரசாங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்தபோது அவர்கள் யாழ்ப்பாணத்தில் அபிவிருத்திப் பணிகள் இன்னமும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூறினார்கள்.ஆனால் நீங்களோ எல்லாம் பிரமாதம் என்கிறீர்கள்.சபாஷ் அரசைவிட நீங்கள் ஒருபடி உயர்ந்து நிற்கிறீர்கள்.

இந்தசந்திப்பு முடிவுறும் வேளையில் பண்ணை வீதிப் பயிலரங்கில் பங்கு கொண்ட ஓட்டோ ஒன்று கடலில் சரிகின்றது.

தாம் தீம் ...தகிட தத்தோம்...
டமுக்கு...டுமுக்கு...டமுக்கு...
பயிலரங்கு தொடர்கிறது...

## கடற்றொழிலாளர்களுக்கு ஜனவரி முதல் காப்புறுதி கட்டாயம்



அடுத்த வருடம் முதல் கடலுக்குச் செல்கின்ற சகல கடற்தொழிலாளர்களுக்கும் காப்புறுதிப்பத்திரங்களை வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவிக்கின்றது.

அத்துடன் காப்புறுதிப்பத்திரம் இல்லாத மீன்பிடிப்படகுகளுக்கு அடுத்த வருடம் முதல் கடலுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படமாட்டாது என அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார். 10 மாதங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப் பட்ட கடற்றொழிலாளர்களுக்கான இந்த காப்புறுதி முறைமையை பெற்றுக் கொள்வதற்கு கடற்றொழிலாளர்கள் ஆர்வம் காட்டுவதில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வேறு நாடுகளில் காப்புறுதி பெற்றுக் கொள்வது ஒவ்வொரு பிரஜைக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் ராஜித சேனா ரத்ன கடற்றொழிலாளர்களுக்கு சார்பாகவே காப்புறுதி முறை தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த காப்புறுதி திட்டத்தின் மூலம் 750 ரூபாய் வருடாந்த பங்களிப்பை வழங்கும் மீனவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் காப்புறுதியையும் ஆயிரத்து 500 ரூபாய் பங்களிப்பை வழங்கும் மீனவர்கள் 3இலட்சம் ரூபாய் வரையும் காப்புறுதி பெறமுடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஏ)

## 95 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள் கடத்தியவர் கைது

(கொழும்பு)

பண்டாரநாயக்க விமான நிலையத்தில் 95 இலட்சம் ரூபாய் பெறுமதியான 1.3 கிலோ கிராம் பிரவுன் ஹெரோயின் போதைப் பொருளுடன் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, மாளிகாவத்தையைச் சேர்ந்த 33 வயதான இச் சந்தேக நபர் சென்னையிலிருந்து வரும் போது நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு பண்டார நாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் போதை ஒழிப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட இவ் சந்தேக நபர், சென்னையில் தான் சந்தித்த ஒருவரே இப்போதைப் பொருட்களை வழங்கி யதாக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். எனினும் தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (ஏ)

## தமிழ் வர்த்தகரின் சடலம் மட்டக்குளியில் மீட்பு

(கொழும்பு)

மட்டக்குளி, காக்கைதீவு பிரதேசத்திலிருந்து பிரபல வர்த்தகர் ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர். இந்தியாவிலிருந்து தமிழ்த் திரைப்படங்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் அந்தோனிராஜா வேலுப்பிள்ளை (வயது53) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இவரது சடலம் நேற்று மாலை 3.30 மணியளவில் காக்கைதீவு பகுதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார். ஜங்கரன் நிறுவனத்தின் இலங்கைக்கான முகவராகச் செயற்பட்டுள்ள இவர் எம்.ஆர்.அசோசியேட் நிறுவனத்தின் தலைவர் என்பதோடு பயணமுகவர் நிலையமொன்றையும் நடத்தி வந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு அல்லது நேற்று ஞாயிற்றுக்கிழமை அதி காலை இவரது மரணம் இடம்பெற்றிருக்கலாம் என நம்பப்படுவதாக தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். (ஏ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### பொறுமைக்கு பெரிய பரிசு



- நம்பிக்கை நேர்மையும் பக்தியும் உன்னிடம் இருக்கும் வரை அனைத்து செயலும் முன்னேற்றமடை யும். இறைவன் அருளால் அபாயம் எதுவும் ஏற்படாது.
- பூமி மாதாவை போன்று அனைத்தையும் பொறுமையாக ஏற்றுக்கொள்ள தயாராக இருந்தால் உலகமே உங்கள் காலடியில் அமரும்.
- நன்மைகளைப் பெற வேண்டுமானால் வாழும் தெய்வமாகிய ஒவ்வொரு மனிதனையும் வழிபடுங்கள்.
- ஏழைக்கு உதவி செய்வது என்பது கோயிலில் சிவனை கண்டு வணங்குபவனிடம் சிவன் அடையும் மகிழ்ச்சியை விட மேலானதாகும்.
- கடவுள் வரம்பு கடந்த பெருமைகளை உடையவர். அவரை வணங்கி தூய்மை யான மனதைப் பெறலாம்.
- இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் அவரையே எப்போதும் சார்ந்து நில்லுங்கள்.
- கையை இறைவன் படைத்தது கொடுப்பதற்கே. நீ பட்டினியாய் கிடக்க நேர்ந்தாலும் உன்னிடத்தில் ஒருவன் கேட்டால் கடைசிப் பருக்கையையும் கொடுத்து விடு. அப்போது நீ பூரணமடைவதுடன் தெய்வமாகவும் ஆவாய்.

# கருஜயசூரியாவை தலைவராக்க ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும்

## பிறேமதாசவின் பாரியார் அழைப்பு

கருஜயசூரியவிடம் கட்சியின் தலைமைத்துவத்தை ஒப்படைப்பதற்கான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைத்து தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிறேமதாசவின் மனைவி கேமா பிறேமதாச தெரிவித்துள்ளார்.

புதிய தலைமைத்துவத்துடன் மீண்டும் ஐக்கியப்பட வேண்டிய தேவையை ஐக்கிய தேசியக்கட்சி எதிர்நோக்கியுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், ஐக்கிய தேசியக்கட்சி இலங்கையின் மிகப்பெரும் தனி அரசியல் கட்சியாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். நாட்டிற்கு பல சிரேஷ்ட தலைவர்களை உருவாக்கிக் கொடுத்த ஐக்கிய தேசியக்கட்சி ஜனநாயக ரீதியான ஒரு நிறுவனம் ஆகும். முன்னைய காலங்களில் அநேகமான தேர்தல்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமாக நடைபெற்றதாக தெரிவிக்கும் கேமா பிறேமதாச, இதற்கு முன்னர் இருந்த தலைவர்கள் மக்களின் இதயத்துடிப்பை அறிந்து செயற்பட்டதாக தெரிவித்துள்ளார்.

ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே அதிகாரங்கள் சமமாக பேணப்படவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி தோற்கடிக்க முடியாதவொரு கட்சியாக இருந்ததாகவும் எனினும் தற்போது மிகவும் கவலைக்குரிய மாறுபட்ட நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பல சிரேஷ்ட தலைவர்களை தற்போது இழந்துள்ளதாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படாததால் தொடர்ச்சியாக எதிர்நோக்க நேரிட்ட தேர்தல் தோல்விகளால் அதிருப்தி அடைந்த அவர்கள் கட்சியில் இருந்து விலகிச்சென்றமையே காரணம் என அவர் கூறுகின்றார்.

இந்த நிலைமை தொடர்ந்தும் நீடித்தால் இலங்கையின் அரசியல் மிகவும் கவலைக்குரிய நிலையை அடையும் எனவும் தனி ஒரு கட்சிஅதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கு அது காரணமாக அமையும் எனவும் அவர் குறிப்பிடுகிறார்:

இந்த நிலைமை ஏற்படும் பட்சத்தில் இலங்கையில் தொடர்ந்தும் ஜனநாயகம் நீடிக்காது என்பதே அவரின் கருத்தாகும். இந்த மிகப்பெரும் கட்சியை நேசிக்கும் அனைவரும் ஒன்றிணைந்து கைகோர்க்க வேண்டிய காலம் மலர்ந்துள்ளதாகவும் அவர் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தலைமைத்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் செயற்பாடானது மிகவும் ஒழுக்கத்துடன் கூடியவகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கட்சியின் தேவையை கவனத்திற் கொண்டு ஏனைய அனைத்து தனிப்பட்ட நோக்கங்களை புறந்தள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பகவதபடல வாசிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திய சாயிசேவா நிலையத்தின் பகவத படல வாசிப்பு இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை 9 மணி முதல் 11 மணி வரை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இவ்பகவத படல நிறைவு நாளன்று நாராயண சேவை இடம்பெறவுள்ளது எனவும் சத்திய சாயிசேவா நிலையம் அறிவித்துள்ளது. (அ)

# மஹிந்த சிந்தனை தொடர்பில் அதிகம் புகழ வேண்டாம்

## அனுர எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)


திட்டம் ஒன்று வெற்றி பெற்றால் அது மஹிந்த சிந்தனையுடையது என்றும் தோல்வியுற்றால் அமைச்சர்களின் செயற்பாடு என்றும் கூறப்படுகின்றது. எனவே, மஹிந்த சிந்தனை தொடர்பில் அதிகம் புகழ வேண்டாம் என்று ஜனநாயக தேசியக் கூட்டணி எம்.பி.அனுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பிடம் கேட்டுக் கொண்டனர்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டுறவு உள்நாட்டு வர்த்தகம், பாரம்பரிய கைத்தொழில் சிறு தொழில் முயற்சி மற்றும் கைத்தொழில் வாணிபம் ஆகிய அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் பேசுகையிலேயே அனுர குமார எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிளாஸ்ரிக் கூடையில் மரக்கறி பொதியிடல் விவகாரத்தில் முடிவொன்று காணும் வரையில் ஓயப்போவதில்லையென அமைச்சர் கூறியிருந்தார். எனினும் அவரது இந்த அச்சுறுத்தலானது அடுத்த 24 மணி நேரத்திற்குள்ளேயே மாறிவிட்டது. பிளாஸ்ரிக் கூடைத்திட்டம் தற்போது நிறுத்தி வைக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அமைச்சரால் ஆரம்பிக்கப்படுகின்ற ஒரு விடயம் மக்களுக்கு பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது. இதனையடுத்து ஜனாதிபதியின் தலையீட்டுடன் அந்தப் பிரச்சினைக்கு முடிவு வருகின்றது. (அ-2)

# வலி.மேற்கில் நவீன கடை தொகுதியும் பல்நோக்கு மண்டபமும் அமைக்கப்படும்



(மல்லாவி)

உள்ளூராட்சி அமைச்சின் 40 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் தற்போது பேருந்து தரிப்பிடம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் தொடராக மேலும் 110 அடி நீளம் 66 அடி அகலம் கொண்ட நவீன கடைத் தொகுதியும் பல்நோக்கு மண்டபமும் அமைக்கப்படவுள்ளதாக வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி ந்ாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு நெல்சிப் திட்டத்தின் கீழ் நவீன கடைக் கட்டடத் தொகுதி அமைத்தல் தொடர்பான பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள், பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவதாக குறிப்பிட்டனர். (அ-3-15)

# தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவரின் வீட்டுக்கு முன் மலர் வளையம்

(கொழும்பு)


இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்னவின் நுகேகொடையிலுள்ள வீட்டிற்கு முன்பாக நேற்று முன்தினம் இனந்தெரியாத சிலர் மலர் வளையமொன்றை வைத்துவிட்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பில் மிரிஹான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக கெமுன விஜேரத்ன தெரிவிக்கிறார். நேற்று முன்தினமிரவு 11.30 மணியளவில் தனது வீட்டிற்கு அருகில் வாகனத்தில் வந்த சிலர் மலர் வளையத்தை வைத்துவிட்டு சென்றதை முன் வீட்டிலுள்ள உறவினர்கள் அவதானித்துள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன் தனது முறைப்பாட்டிற்கு அமைய பொலிஸார் தன்னிடம் வாக்குமூலம் பெற்றுக் கொண்டதாகவும் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இந்த நிலையில் முன்வைத்த காலை பின்வைக்கப்போவதில்லை என்றும் திட்டமிட்டவாறு அடுத்த வாரத்தில் நாடு முழுவதும் பாரிய பேருந்து பகிஷ்கரிப்பை முன்னெடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# அராலி–தெல்லிப்பளை வீதியை காப்பெற் வீதியாக மாற்ற முடிவு



(மல்லாவி)

அராலி-தெல்லிப்பளை வீதியானது காப்பற் வீதியாக மாற்றுவதற்குரிய ஆரம்பக்கட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அராலியில் இருந்து தெல் லிப்பளை ஊடான அச்சுவேலி சந்தி வரையான சுமார் 27 கிலோமீற்றர் தூரங் கொண்ட வீதியானது இரண்டு வாகனங்கள் பயணிக்க கூடியவாறு வீதி அகலிப்பு செய்யப்படவுள்ளது.

அகலிப்பு தொடர்பான நில அளவீடுகள் அராலியில் இருந்து ஆரம்பமாகி நேற்று சித்தன்கேணியிலுள்ள வட்டு இந்துக் கல்லூரி வரை நடைபெற்றது.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு இவ்வீதிக்கு காப்பெற் கலவை இடப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரிக்கு முன்பாக இருந்து சித்தன்கேணி சந்தி வரையிலான வீதியில் காணப்பட்ட குழிகள் காப்பெற் கலவை இடப்பட்டு செப்பனிடப்பட்டு வருகின்றன. (அ-3-15)

# தான்தோன்றீஸ்வரர் ஆலயக் கேணியை பார்வையிட வந்த சுற்றுலாப் பயணி பலி

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் கேணியை பார்வையிட சென்ற சுற்றுலா பயணியொருவர் கால் தவறி கேணியில் வீழ்ந்து நேற்று பலியாகியுள்ளார்.

தென்னிலங்கையில் இருந்து முல்லைத்தீவுக்கு சுற்றுலாவுக்கு சென்ற இவரே கால் தவறி கேணியில் விழ்ந்து பலியாகியுள்ளார்.

இவர் பாதுக்கையை சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பண்டார மற்றும் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயசிங்க ஆகியோர் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# 10 ஆயிரத்துக்கு 1 ஓட்டம் தேவை; 9999 ஓட்டங்களில் ஜெயவர்த்தன

(செஞ்சூரியன்)

இலங்கை அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் மஹேல ஜெயவர்த்தன. முன்னாள் அணித்தலைவரான அவர் தென்னாபிரிக்காவிற்கு எதிரான முதல் டெஸ்டில் தனது 10 ஆயிரம் ஓட்டத்தை தவற விட்டார்.

ஜெயவர்த்தன முதல் இன்னிங்ஸில் 30 ஓட்டங்களை எடுத்தார். இரண்டாவது இன்னிங்ஸில் 16 ஓட்டங்களை எடுத்தால் டெஸ்ட் போட்டியில் 10 ஆயிரம் ஓட்டங்களை எடுத்து சாதனைப் புரிந்து இருப்பார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக 15 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

ஜக் கலிஸ் அவரை நேரடியாக ரன் அவுட் செய்தார். இதனால் ஜெயவர்த்தன 10 ஆயிரம் ஓட்டங்களை தொடமுடியாமல் போனது.

126 டெஸ்டில் விளையாடிய இவர் 9 ஆயிரத்து 999 ஓட்டங்களை எடுத்துள்ளார். சராசரி 51.01 ஆகும். அதிகபட்சமாக 374 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 29 சதமும் 40 அரைச்சதமும் அடித்துள்ளார். தென்னாபிரிக்காவுக்கு எதிராக எதிர்வரும் 26ஆம் திகதி தொடங்கும் 2-வது டெஸ்ட் போட்டியில் 10 ஆயிரம் ஓட்டங்களை எடுப்பார்.

இதன் மூலம் 10 ஆயிரம் ஓட்டங்களைப் பெறும் இலங்கையின் முதல் வீரர் என்ற சாதனையை ஜெயவர்த்தன படைப்பார். உலக அளவில் 9வது வீரர் என்ற பெருமையையும் பெறுவார்.



சச்சின் டெண்டுல்கர் (15,183 ஓட்டங்கள்), டிராவிட் (13,094ஓட்டங்கள்), பொண்டிங் (12,656), கலிஸ்( 12,036), லாரா (11,953), அலனன் போர்டர் (11,174), ஸ்டீவோ (10,927), கவாஸ்கர் (10,122ஓட்டங்கள்) ஆகியோர் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்கள் ஆவர்.

# வரலாறு படைத்தார் செய்னா உலக பட்மின்டன் இறுதிக்கு தகுதி

உலக சுப்பர் சீரிஸ் பட்மின்டன் தொடரின், பெண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய முதல் இந்தியர் என்ற சாதனை படைத்தார் செய்னா நேவல். நேற்று முன் தினம் நடந்த இத்தொடரின் அரையிறுதியில் இவர் டென்மார்க் வீராங்கனையை வீழ்த்தினார்.

உலக சுப்பர் சீரிஸ் பட்மிட்டன் தொடர் சீனாவின் லிசோவ் நகரில் நடக்கிறது. இதில் பட்மிட்டன் தரவரிசையில் முதல்-8 இடங்களை பிடித்துள்ள வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இவர்கள் ஏ, பி என இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடக்கிறது. இந்தியாவின் செய்னா நேவல், பி பிரிவில் இடம் பெற்றிருந்தார்.

இத்தொடரின் தொடக்கத்தில் இருந்தே அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த செய்னா நேவல், அரையிறுதியில் டென்மார்க்கின் டினே பவுனை சந்தித்தார். இதன் முதல் செட்டை 21-17 என செய்னா நேவல் வென்றார். தொடர்ந்து அசத்திய இவர், 21-18 என இரண்டாவது செட்டையும் கைப்பற்றினார். 34 நிமிடங்கள் நடந்த போட்டியின் முடிபில் 21 - 17, 21-18 என்ற செட் கணக்கில், வெற்றி பெற்ற செய்னா நேவல், இத்தொடரில் முதன் முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இறுதிப்போட்டியில் இவர், உலகின் நம்பர் -1 வீராங்கனை சீனாவின் யிகான் வாங்கை சந்திக்கிறார்.





# 2015 உலக கோப்பையில் விளையாடுவேனா? 2013ஆம் ஆண்டில் முடிவு செய்வேன் -தோனி



(கான்பரா)


அடுத்த உலகக் கோப்பை கிரிக்கெட்டில் விளையாடுவது பற்றி இப்போது எதுவும் கூற முடியாது. அதற்கு இன்னும் நீண்ட நாட்கள் உள்ளது என்று இந்திய அணித் தலைவர் மகேந்திரசிங் தோனி கூறியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி விருது வழங்கும் விழாவில் ஆண்டின் சிறந்த இந்தியர் விருதைப் பெற்றுக் கொண்டு பேசிய தோனி இது குறித்துக் கூறியதாவது,

2015 உலகக் கோப்பைக்கு இன்னும் மூன்றரை ஆண்டுகள் உள்ளது. விக்கெட் காப்பாளராகவும், துடுப்பாட்ட வீரராகவும் செயல்படுவது மிகவும் கடினமானது. எனது உடல்தகுதி எப்படி உள்ளது என்று 2013-ம் ஆண்டு இறுதியில் ஆலோசித்து அதற்கேற்ப முடிபு செய்வேன். இந்த ஆண்டு ஒருநாள் சர்வதேச போட்டியில் உலக கோப்பையை வென்றதே எனது மிகப் பெரிய சாதனை என நினைக்கிறேன். 28 ஆண்டுகளுக்கு பிறகு கோப்பையை வென்ற மகிழ்ச்சியில் இந்திய வீரர்கள் எல்லோருமே கண்ணீர்விட்டு அழுதோம்.

அதுபோன்ற சமயங்களில் உணர்ச்சியை கட்டுப்படுத்துவது கடினம். என்னை அறியாமலே நானும் கண்ணீர்விட்டு அழ ஆரம்பித்த போது, சக வீரர்கள் என்னை அணைத்துக் கொண்டனர். எனது ஹெலிகொப்டர் ஷாட் மிகவும் பிரபலமானது; மகிழ்ச்சி அளிக்கிறது. ஜார்க்கண்டில் நாங்கள் டென்னிஸ் பந்தில் விளையாடும்போது சிக்சர் அடிப்பதற்காக அந்த ஷாட்டை பயிற்சி செய்தேன். அது எனக்கு வெகுவாக கை கொடுக்கிறது. இப்போது பலர் அந்த ஷொட்டை அடிக்க முயற்சி செய்கிறார்கள். இவ்வாறு தோனி கூறினார்.

# சச்சின்;சேவாக்கை எதிர்கொள்வது எப்படி? - சப்பல் ஆலோசனை



(மெல்போர்ன்)

இந்தியாவின் சச்சின், சேவாக் ஆகியோரை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து அவுஸ்திரேலிய வீரர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார் கிரேக் சப்பல்.

இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 26 ஆம் திகதி தொடங்குகிறது.

இப்போது அவுஸ்திரேலிய அணி மோசமாக விளையாடி வரும் நிலையில், அந்த அணிக்கு வியூகம் அமைத்துக் கொடுக்கவுள்ளார் அந்த அணியின் முன்னாள் வீரரும், இந்திய அணியின் முன்னாள் பயிற்றுனருமான சப்பல். இதற்காக அவர் அடுத்த வாரத்தில் அவுஸ்திரேலிய வீரர்களை சந்தித்துப் பேசுகிறார்.

அப்போது சேவாக், சச்சின் போன்ற வீரர்களை எப்படிக் கையாள்வது, எப்படி ஓட்டங்கள் குவிக்காமல் தடுப்பது என்பது குறித்து ஆலோசனை வழங்குகிறார் என டெய்லி டெலிகிராப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இதுவரை அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டிகளில் சச்சினே ஆதிக்கம் செலுத்தியுள்ளார். அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் ஒருபோதும் சச்சின் மீது ஆதிக்கம் செலுத்தியதில்லை என்றும் கூறியுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 31 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள சச்சின் 11 சதம் அடித்துள்ளார். அவரின் சராசரி 60.6 சப்பல் இந்தியாவின் பயிற்சியாளராக இருந்ததால் இந்திய வீரர்களின் பலம், பலவீனத்தை தெரிந்து வைத்திருக்கக்கூடும்.

# ஆப்கான் பாக்குடன் மோதல்

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி 2010 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடந்த உலக இருபது-20 போட்டியில் இந்தியா மற்றும் தென்னாபிரிக்க அணிகளுடன் மோதியது. அந்த ஆட்டத்தில் 9ஆவது இடம்பெற்றது.

2009ஆம் ஆண்டு நடத்த உலகக் கிண்ண தகுதிச் சுற்றுப் போட்டியில் 5 ஆவது இடம் பிடித்த ஆப்கானிஸ்தான் அணி, அதன் மூலம் சர்வதேச ஒருநாள் போட்டியில் விளையாடும் அந்தஸ்தை பெற்றது. இருப்பினும் ஆப்கானிஸ்தான் அணி இதுவரை ஒருநாள் போட்டியில் சிறிய அணிகளுடன் தான் மோதி இருக்கிறது.

முதல்முறையாக ஆப்கானிஸ்தான் அணி டெஸ்ட் அந்தஸ்து பெற்ற ஒரு அணியுடன் மோத இருக்கிறது. அதாவது பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் அணிகள் இடையேயான ஒருநாள் போட்டி சார்ஜாவில் பெப்ரவரி 10ஆந் திகதி நடக்கிறது. இந்த போட்டியின் மூலம் ஆப்கானிஸ்தான் அணி சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அடியெடுத்து வைக்கிறது.

# கிரிக்கெட்டின் எதிர்காலம்...


உலக அரங்கில் கால்பந்துக்கு அடுத்து அதிக ரசிகர்களைக் கொண்டது கிரிக்கெட் தான். விரையில் கால்பந்துக்கு நிகராக கிரிக்கெட்டுக்கு ரசிகர் பட்டாளம் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் இருபது-20 போட்டிகள் தான். இது வளமான வளர்ச்சி என்றாலும், மறுபுறம் பாரம்பரியம் மிக்க டெஸ்ட்,ஒருநாள் போட்டிகள் வீழ்ச்சிப் பாதையில் சென்று கொண்டுள்ளன. எதிர்காலத்தில் இருபது-20 போட்டிகள் மட்டுமே இருக்கும் என்ற சூழ் நிலையும் ஏற்படலாம்.

### பல்வேறு பரிமாணம்

கால்பந்து,ஹொக்கி, டெனிஸ் ஆகிய விளையாட்டுப் போட்டிகளில் பல்வேறு பரிமாணங்கள் இல்லை. ஆனால் கிரிக்கெட்டில் மட்டும் டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபது-20 என மூன்று பரிமாணங்கள் காணப்படுகின்றது. இதில் ஒன்று எழுச்சி பெற்றால் மற்றொன்று வீழ்ச்சியடையத் தொடங்குகிறது. இருபது-20 போட்டிகளின் அசுர வளர்ச்சியின் காரணமாக டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் தொய்வை எதிர்கொண்டுள்ளன.

### காயம் காரணம்

கிரிக்கெட் என்றாலே டெஸ்ட் போட்டிகள் என்ற காலம் தற்போது மலையேறிவிட்டது. வீரர்களின் உண்மையான திறமையை வெளிக்கொணரும் ஆற்றல் டெஸ்ட் போட்டிகளுக்கு உண்டு. ஓவர் வரையறை இல்லாததால் துடுப்பாட்டக்காரர்கள் மற்றும்



பந்துவீச்சாளர்கள் திறமையை நிரூபிக்க அதிக காலம் எடுத்துக்கொள்வர்.

இதன் மூலம் பெரும்பாலான வீரர்கள் அடிக்கடி காயத்துக்கு உள்ளானார்கள். அதற்கு பின் வந்த ஒருநாள் போட்டிகளில் 50 ஓவர்கள் என்ற வரையறை இருந்தது. தற்போது இருபது-20 போட்டிகளில் 20 ஓவர்கள் மட்டுமே என்பதால், பந்துவீச்சாளர்கள் தலா 4 ஓவர்கள் மட்டுமே பந்துவீச வேண்டிய நிலை ஏற்பட்டது. தவிர இவ்வகைப் போட்டிகளில் விளையாடுவதால் வீரர்கள் காயத்திலிருந்து தப்பமுடிகிறது.

### பணம் முக்கியம்

இதன் காரணமாக பெரும்பாலான வீரர்கள் ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் மட்டுமே பங்கேற்க விரும்புகின்றனர்.

ஒரு டெஸ்ட் போட்டிக்கு வீரர்கள் பெறும் சம்பளம் சுமார் 2 இலட்சம் ரூபாய். ஒருநாள் போட்டிக்கு 1.5 இலட்சம் ரூபாய். ஆனால் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்)உள்ளிட்ட இருபது-20 போட்டிகளில் வீரர்கள் கோடிக் கணக்கான ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்யப்படுகின்றனர்.

இதன் காரணமாக சர்வதேச கிரிக்கெட் தொடர்களையும் புறக்கணித்துவிட்டு இவ்வகைப் போட்டிகளில் பங்கேற்க வீரர்கள் விரும்புகின்றனர். முதல் ஐ.பி.எல் தொடரில் சென்னை சுப்பர் கிங் அணியின் தலைவர் தோனி, தான் அடிக்கும் ஒவ்வொரு ஓட்டத்திற்கும் 1.5 இலட்சம் ரூபாயைப் பெற்றார்.

### எதிர்காலம்

பணம் மற்றும் காயத்தின் அடிப்படையில் வீரர்கள் டெஸ்ட் போட்டிகளைப் புறக்கணிக்க ஆரம்பித்துள்ளனர். வீரர்களின் மனநிலை மட்டுமன்றி ரசிகர்களின் மனநிலையும் மாறத் தொடங்கியுள்ளது. டெஸ்ட் போட்டிகளை பார்க்க ரசிகர்கள் தற்போது விரும்புவதில்லை. ஒரு போட்டியின் முடிபுக்கு 5நாட்கள் காத்திருக்க அவர்கள் விரும்புவதில்லை. 3மணி நேரத்தில முடிபு கிடைக்கும் இருபது-20 போட்டிகள் ரசிகர்களை பெருமளவு கவர்ந்து விட்டது. இதே நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் இருபது-20 போட்டிகள் மட்டுமே நிலைத்திருக்கும். பாரம்பரியம் மிக்க டெஸ்ட் போட்டிகள் பெயரளவுக்கு மட்டுமே இருக்கும்.

# நால்வரைக் கொன்றவர் பொலிஸில் சரணடைந்தார்

(கொழும்பு)

எப்பாவல கட்டியாவ பகுதியில் நான்கு பேரை கொலை செய்த சந்தேகநபர் நேற்று மதியம் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார். தம்புத்தேகம பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர் சரணடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு தாம் எப்பாவெல கட்டியாவ பகுதியில் உள்ள வீட்டிற்கு சென்று குறித்த நான்கு பேரையும் கொலை செய்ததாக சந்தேக நபர் பொலிஸாரிடம் வாக்கு மூலமளித்துள்ளார். இதேவேளை சரணடைந்த சந்தேகநபர் கொலை செய்யப்பட்ட இரண்டு பெண்களின் சகோதரர் என்பது தெரியவந்துள்ளதாக அநுராதபுரம் பிரதி பொலிஸ் மா அதிபர் கித்சிறி தயானந்த கூறினார்.

இந்த கொலைகளுடன் தொடர்புடைய வேறு சந்தேகநபர்கள் இருக்கின்றனரா என்பதை கண்டறிவதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளைகொலைசெய்யப்பட்டநால்வினதும் சடலங்கள் பிரேத பரிசோதனைகளுக்காக நேற்று பிற்பகல் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. (ஏ)

# மெடம் ஜீனாவின் பிணை நிராகரிப்பு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி பிளாஸாவில் விபசார விடுதியொன்றை நடத்தியதாக கூறப்படும் மெடம் ஜீனா என அழைக்கப்படும் ரோஸ்மேரி ஜுட்டின் பிணை மனுவை கொழும்பு மேல் நீதிமன்றம் மீண்டும் நிராகரித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ இப்பிணை மனுவை நிராகரித்த போது குற்றம் சுமத்தப்பட்ட ரோஸ்மேரி ஜுட்டின் பிணை மனுவை இந் நீதிமன்றம் பல தடவை நிராகரித்துள்ளது என்பதை சுட்டிக்காட்டினார்.

எனவே இதைவிட உயர்ந்த நீதிமன்றமொன்றில் குற்றம் சுமத்தப்பட்டவரின் வழக்குரைஞர் மனுத்தாக்கல் செய்யவேண்டும் எனவும் நீதிபதி அறிவுறுத்தினார்.

ஒரு வருட காலத்திற்கு மேலாக ரோஸ்மேரி விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# வெளிநாடு செல்லும் பெண்களில் மூன்றிலொருவர் மீது துஷ்பிரயோகம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் வீட்டுப்பணிப் பெண்களாக கடமையாற்றும் இலங்கையர்களில் சராசரியாக மூவரில் ஒருவர் தாக்கப்படுதல், தீயினால் சுடப்படுதல் போன்ற உடல் ரீதியான துஷ்பிரயோ கங்களுக்கு உள்ளாவதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

கத்தோலிக்க ஆயர்கள் அமைப்பின் சமூக சேவைப் பிரிவான கரித்தாஸ் ஸ்ரீலங்கா செடக் நிறுவனத்தினால் சர்வதேசபுலம்பெயர்ந்த தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இந்த ஆய்வு நூல் வெளியிடப்பட்டுள்ளது.


இப்பணிப்பெண்களில்31சதவீதமானோர் உடல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகியுள்ளனர். 30 சதவீதமானோர் சம்பளம் வழங்கப்படாமை குறித்து முறைப்பாடு செய்துள்ளனர். 44 சதவீதமானோர் உணவு வழங்கப்படாமலிருந்ததாக முறைப்பாடு செய்துள்ளனர்.

25 சதவீதமானோர் தமக்கு உறங்குவதற்கு முறையான இடம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர். இதேவேளை சட்ட நிபுணரான சியாமளி ரணராஜா மேற்படி கரித்தாஸ் நிகழ்ச்சியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு போக்குக்கள் குறித்து விளக்கமளிக்கையில் வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களாகச் செல்லும்90 சதவீதமானோர் அதற்கு முன் ஒருபோதும் தொழில்துவும்செய்யாதவர்களெனத்தெரிவித்தார்.

சொந்த நாட்டில் பணிபுரியாத ஒரு பெண்ணுக்கு வெளிநாடு சென்று பணிபுரிவது கடினமாகும் என அவர் கூறினார். (எ-5)

# சர்வதேச புலம் பெயர்ந்தோர் தின பாதயாத்திரையில் ஜனாதிபதி பங்கேற்பு

(கொழும்பு)



சர்வதேச புலம் பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு நேற்று காலை கொழும்பு காலிமுகத்திடலில் ஆரம்பமான பாதயாத்திரை நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

இத்தினத்தை முன்னிட்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அதன் பிரதான நிகழ்வு நேற்று காலை கொழும்பு காலிமுகத்திடலில் ஆரம்பமானது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்த இந் நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்து கொண்டனர். (ஏ)

## தமிழர்கள்...

இடங்களில் தொடக்கத்தில் சில விசமிகள் கல் வீச்சு உள்ளிட்ட சில தீயசெயல்களில் ஈடுபட்டனர். வேறு எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை.

கேரளாவில் கடந்த சில வாரங்களாக தமிழர்கள் மீதோ, தமிழக ஐயப்ப பக்தர்கள் மீதோ எந்த இடத்திலும் தாக்குதல் நடக்கவில்லை ஆனால் தாக்குதல் நடத்தப்படுவதாக தவறான தகவல் பரப்பப்படுகிறது என கூறினார். (ஏ)

## ௬00 பொலிஸார் குறித்து...

மிடையிலான போர் நிறுத்தம் முடிபடைந்த போது கல்முனைப் பொலிஸ் நிலையம் உட்பட சில பொலிஸ் நிலையங்கள் விடுதலைப் புலிகளினால் முற்றுகையிடப்பட்டன.

இந்த முற்றுகையின் பின்னர் 500க்கும் மேற்பட்ட பொலிஸார் பற்றி அதற்குப் பின்னர் எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை. அவர்களில் பலர் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள்.

இச்சம்பவம் தொடர்பாக ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்திருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் அவ்வேளையில் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண பொறுப்பாளராக இருந்த கருணா என்று அழைக்கப்படும் தற்போதைய துணை அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு எதிராக சாட்சியம் அளித்தவர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதாக நல்லிணக்க ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை நடத்தவேண்டும் என்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசு தொடர்பாக மருதமுனையைச் சேர்ந்த முஸ்லிம்மக்கள்பலரும்கருத்துத்தெரிவித்தனர்.

இதேவேளை நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்த துணை அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் இக்கொலைகளுடன் தமக்கு தொடர்பு எதுவும் இல்லை என்று குற்றச்சாட்டுக்களை நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## வடக்கு-கிழக்கு மாகா...

நாட்களுக்கு வட கிழக்குப் பகுதியில் காற்றுடன் கூடிய கடும் மழை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முக்கியமாக வடமத்திய, கிழக்கு, ஊவா மாகாணப் பகுதிகளிலும் அம்பாந்தோட்டை மாவட்டப் பகுதிகளிலும் மழைகாணப்படும்.

கடற்பிராந்தியங்களில் முக்கியமாக வடக்கு, கிழக்கு, வடகிழக்கு, ஆழ்கடல் பிராந்தியங்களில் இடியுடன் கூடி மழையும் ஏனைய ஆழ்கடல் பகுதியில் மழையும் காணப்படும்.

கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 40 கிலோ மீற்றர் முதல் 50 கிலோ மீற்றர் வரையிலான வேகத்தில் வடக்குக் கிழக்கு திசையிலிருந்து வீசும்.

வடக்கு கிழக்கு ஆழ்கடல் பகுதிகளில் இந்த காற்றின் வேகமானது 60 கிலோமீற்றர் முதல் 70 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும்.

வடக்குக் கிழக்கு கரையோர கடல் பகுதிகள் கொந்தளிப்பாக காணப்படுகின்றது. இதனால் மீனவர்கள் சற்று அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என அவர் மேலும் கூறினார். (எ-11)

## பொறுப்பை உணர்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந் நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அரசாங்கம் பகிரங்கமாக வெளியிட்டமையை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் வரவேற்றுள்ளதாக அவருடைய பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமரசத்தை ஏற்படுத்தி நீடித்த சமாதானத்தை உருவாக்க நல்லிணக்கத்தின்பால் பொறுப்புடன் முன்னேறிச்செல்லும் என பான் கீ மூன் நம்புவதாக அவரது பேச்சாளர் கூறியுள்ளார்.

படைத்தரப்பினருக்கும் தமிழீழ விடுதலை புலிகளுக்கும் இடையிலான 30 வருடகால போர் 2009ஆம் ஆண்டு மே மாதம் பொது மக்களின் பெரும் உயிரிழப்புடனும் இடப்பெயர்வுடனும் முடிபுக்கு வந்தது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போர் குறித்து ஆராய பான் கீ மூன் மூன்று பேர் கொண்ட நிபுணர் குழுவை அமைத்து அக்குழுவின் அறிக்கைகயை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்திருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இலங்கை படைத்தரப்பினரும், தமிழீழ விடுதலைப்புலிகளும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக நிபுணர் குழு அறிக்கை குறிப்பிட்டிருந்தது.

அத்துடன் இப் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள சுயாதீனமான பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என நிபுணர் குழு பரிந்துரை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## ஜனவரி...

அதேவேளை ஓய்வூதியம் பெறுபவர்களுக்காக வழங்கப்படும் வேதன அதிகரிப்பு அடுத்த மாத ஓய்வூதியத்துடன் சேர்க்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## 'இனம்' பதத்தை...

எனினும் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் உட்பட சகல உத்தியோக பூர்வ ஆவணங்களிலும் 'இனம்' என்பதை நீக்குவதற்கு சிபார்சுசெய்ய வேண்டும் என்ற சிபார்சை தமது அறிக்கையில் உள்ளடக்காமை குறித்து அவர்கள் கவலை கொள்வதாகவும்சி.ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

இவ் ஆணைக்குழு தற்போது சட்டரீதியாக இயங்காது விடினும் மேற்படி விடயம் குறித் து ஜனாதிபதியின் கவனத்தை ஈர்ப்பதற்காக அவருக்கு கடிதம் எழுத வேண்டும் என தனிப்பட்ட ரீதியில் தான் கருதியதாகவும் அவர் கூறினார்.

சனத்தொகை கணக்கெடுப்பின் போது மாத்திரமே இனம் என்பது சம்பந்தப்பட வேண்டும் எனவும் ஏனைய சந்தர்ப்பங்களில் பிரஜை ஒருவரை இனத்துவ ரீதியில் அடையாளப்படுத்தக் கோருவது 'பொது இலங்கை அடையாளம் ஒன்றை' ஏற்படுத்துவதற்கு தடங்கலாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ)

## நல்லிணக்க ஆணைக்...

மிகவும் அவசியமானது எனவும் ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் வலி யுறுத்தியுள்ளது.

இதேவேளை உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்படவேண்டியது அவசியமானது என ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்புக் கொள்கை மற்றும் வெளிவிவகார பிரிவின் துணைத்தலைவர் கதரீன் அஸ்டன் தெரிவித்துள்ளார்.

இவ் விவகாரங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் ஐக்கிய நாடுகள் சபையுடன் நெருங்கிய தொடர்புகளை பேண வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஏ)


## மரண அறிவித்தல்

### திரு. கந்தையா கருணாகரன்

(உரிமையாளர் - M.R.M. Rice Mill ஊரெழு)



72/11, செம்மணி வீதி, நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா கருணாகரன் அவர்கள் 18.12.2011 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெனிதன் (பிரான்ஸ்), டிலோஜன் (M.R.M Rice Mill), தாரகா (மருத்துவபீடம் - கொழும்பு பல்கலைக்கழகம்), மாதங்கி (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

72/11, செம்மணி வீதி, நல்லூர்.
தொலைபேசி: 021 222 7051

தகவல்: குடும்பத்தினர்.

(6992)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.